விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 13 வெள்ளிக்கிழமை (27.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## திட்டமிட்ட இனக் கலவரங்களின் ஊடாக சிறுபான்மையினங்கள் ஒடுக்கப்படுகின்றன

### ஒன்றுபட வேண்டும் என முதலமைச்சர் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களும் முஸ்லிம்களும் திட்டமிடப்பட்ட இனக் கலவரங்களினூடாக காலங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 11-வது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று மு.ப 10.15 மணியளவில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

### ராஜிவ் கொலைக் குற்றவாளிகள் விடுதலை

## அரசியல் சட்ட அமர்வு ஜுலை 8-ல் விசாரிக்கும்

(சென்னை)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது குறித்த வழக்கை இந்திய உச்சநீதி மன்றத்தின் அரசியல் சாசன அமர்வு எதிர்வரும் ஜுலை மாதம் 8-ம் திகதி விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இந்த வழக்கு தொடர்பான விசாரணையில், அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கை மேற்கொண்டு விசாரிக்கும் என்று அப்போது இந்திய உச்சநீதி மன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பில் இருந்த சதாசிவம் தலைமையிலான அமர்வு கூறியது.

இதனைத் தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட

20 ஆம் பக்கம் பார்க்க....

# ஐ.நா மூவர் குழுவிற்கு அமெ., பிரிட்டன் ஆதரவு



### விசாரணைக்கு ஒத்துழைக்கவும் வலியுறுத்து

(வாஷிங்டன்)

*இலங்கையில் இடம்பெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள ஐ.நா குழுவுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள மூவர் குழுவுக்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆதரவும் வரவேற்பும் தெரிவித்துள்ளன.*

பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியும், சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான மார்ட்டி அதிசாரி, நியூசிலாந்தின் முன்னாள் நீதிபதியும் கம்போடியாவில் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும் தீர்ப்பாயத்

19 ஆம் பக்கம் பார்க்க....



## தனியார் பேருந்து மோதி மாணவன் பரிதாப பலி



(யாழ்ப்பாணம்)

பேருந்துக்காக காத்திருந்த மாணவனை தனியார் பேருந்து மோதித்தள்ளியதில் மாணவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இவ் விபத்தில் அக்கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்று வந்த சுன்னாகத்தைச் சேர்ந்த அன்ரனி மனோறாஜ் (வயது- 16) என்ற மாணவனே உயிரிழந்துள்ளான்.

பாடசாலை முடிவடைந்து பேருந்துக்காக காத்திருந்த இம்மாணவன

20 ஆம் பக்கம் பார்க்க....

### ஈராக் பயணம்; அரசு அறிவுறுத்து

(கொழும்பு)

ஈராக்கு பயணம் செய்வது தொடர்பான பயண அறிவுறுத்தல்களை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

அந்த நாட்டின் வன்முறைகளின் விளைவாக ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இந்த பயண அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈராக்கில் பாதுகாப்பு சூழ்நிலைகள் மோசமடைந்து வருவதை கவனத்தில் கொண்டு இலங்கை பிரஜைகள் அந்நாட்டுக்கு பயணம்

20 ஆம் பக்கம் பார்க்க....

## அடித்துக் கொலை செய்த நபருக்கு மரண தண்டனை

### 17 ஆண்டுகளுக்கு பின்னர் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த பொன்னன் கதிரவேலு என்பவரை கடந்த 1997 செப்ரம்பர் 17 ஆம் திகதி பொல்லால் அடித்துக் கொலை செய்த நபருக்கு 17 ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை மரணதண்டனை விதிக்கப்பட்டவரின் சகோதரருக்கு 5 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதித்ததுடன் மேற்படிக்கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த தூக்குத்தண்டனை பெற்றவரின் தந்தையினை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தார்.

அதேயிடத்தினைச் சேர்ந்த நவரட்ணம் பிரதீஸ்வரன் என்பவருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் பற்றி மேலும் தெரிய

20 ஆம் பக்கம் பார்க்க....

### சிவாஜிலிங்கத்திற்கு பாதுகாப்பு நீக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்திற்கு வழங்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கான பாதுகாப்பு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் மீளப்பெறப்பட்டுள்ளதாக சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தினால வழங்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினருக்கான பாதுகாப்பு தனக்கு கடந்த 2001 ஆம் ஆண்டு முதல்

19 ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம்கள் தாக்கப்படுவதை கண்டித்து யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

### கடும் விவாதங்களுடன் நிறைவேற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் அளுத்தகம மற்றும் பேருவளை, தர்ஹா பகுதிகளில் இடம்பெற்ற முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்துள்ள யாழ்.மாநகர சபை மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமென பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்பட வேண்டுமெனவும் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் பொதுக்கூட்டம் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநகர மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் கடும் விவாதங்களுக்கு மத்தியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்ட ஆரம்பத்தின் போது எழுந்த சபையின் ஆளுங்கட்சியின் அங்கத்துவக் கட்சியான ஈ.பி.டி.பி சார்பில் போட்டியிட்டு பெற்றி பெற்ற முஸ்

20 ஆம் பக்கம் பார்க்க....

### கைக்குண்டு மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி ஆவரங்கால் பிரதான வீதியிலுள்ள பேருந்து தரிப்பிடத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டு 521 ஆவது படைப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட

20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நூல் வெளியீடு

(மானிப்பாய்)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் 130ஆவது ஆண்டை நோக்கிய கல்விப் பயணத்தை சிறப்பித்து பாடசாலை சமூகத்தால் சிந்மயம எனும் நூல் வெளியிட்டு வைகக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 06-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ள மேற்படி நிகழ்வை சிறப்பாக முன்னெடுக்க பாடசாலை சமூகம் தயாராகி வருகிறது. (செ)

# திறன்விருத்திப் பயிற்சி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைளில் ஆலோசனை வழிகாட்டல் சேவையில் ஈடுபடும் 'ஆசிரியர்களுக்கான திறன்விருத்திப் பயிற்சிப்பட்டறை இன்று காலை 8.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலகம் முதனிலை மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி க.சுவர்ணராஜா, வவுனியா பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.ஜெயக்கெனடி, வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு.சுபாஸ்கரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளும் இத் திறன்விருத்திப் பயிற்சிப் பட்டறையில் சகல ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (செ-266)

# குடும்பநல உத்தியோகத்தர்கள் யாழில் நேற்று ஆர்ப்பாட்டம்

## நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

அரச குடும்பநல உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டம் உட்பட நாடளாவிய ரீதியில் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள் தங்கள் சேவைகளிற்கு இடையூறாக உள்ளனர் என்ற காரணத்தினாலேயே இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக குடும்பநல உத்தியோகத்தர்களின் யாழ்.மாவட்ட தலைவர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிப் பெண் பராமரிப்பினை குடும்பநல உத்தியோகத்தர்களே காலம் காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

எமது அர்ப்பணிப்பான சேவையினால் இலங்கையில் படிப்படியாக தாய், சேய் இறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றது.

வருமுன் காப்பதே எமது பணியாகும். ஆனால் தற்போது கர்ப்பிணித் தாய்மார் பராமரிப்பினை தாதியர்கள் கோருகின்றனர்.

தாதிமார்களின் இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஆகவே இது தொடர்பில் எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை நாம் போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

# மன்னிப்புச்சபை விசாரணைக் குழுவுக்கு வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற ஆயுத மோதலகளின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறலை விரிவாக ஆய்வு செய்ய மூன்று நிபுணர்களை ஐ.நா பெயரிட்டுள்ளமை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய அலுவலகம் நேற்று வரவேற்றுள்ளது.

இலங்கையின் நீண்டகால ஆயுத மோதலகளின் இறுதிக் கட்டத்தில் என்ன நடந்தது எனபதை அறியவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, உண்மை மற்றும் இழப்பீடுகளை ஈடு செய்யும் முயற்சியில் இது வரவேற்கத்தக்க முன்னேற்றகரமான ஒரு அடையாளமாகும் என மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுதம் தாங்கிய மோதல்களின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்கள் குறித்து விசாரிக்க ஐ.நா பாகிஸ்தானின் மனித உரிமை ஆர்வலரான அஸ்மா ஜஹாங்கீர், பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியும நோபல் சமாதான பரிசை பெற்றவருமான மார்டி அத்திசாரி மற்றும் நியூசிலாந்தின் முன்னாள் ஆளுநர் ஜெனரலும் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான சில்வியா கார்ட்ரைட் ஆகியோரை நியமித்துள்ளது. (செ-11)

# பாதுகாப்பை அரசு வழங்காவிடில் சர்வதேசத்திடம் உதவி கோருவோம்

## வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களிற்கு மத்திய அரசு உரிய பாதுகாப்பு வழங்காவிட்டால் சர்வதேச நாடுகளின் உதவியுடன் பாதுகாப்பு பெறுவோம் என வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களின் பொலிஸ் பாதுகாப்பு திடீரென நீக்கப்பட்டதனையடுத்து வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு தற்போது நீக்கப்பட்டமை திட்டமிடப்பட்ட சதியாகும்.

இது வடக்கு மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு சவாலாக அமைந்துள்ளது.

எமது நாடு எமக்கான பாதுகாப்பினை வழங்காவிட்டால் இந்தியாவிடம் அல்லது ஐ.நாவிடமா கோருவது?

அல்லது கோரினாலும் இவ் அரசு அனுமதி தருமா? பொலிஸார் எமக்கான பாதுகாப்பினை வழங்காவிட்டால் சர்வதேச நாடுகளின் உதவியுடன் நாம் பாதுகாப்பு பெறுவோம் அல்லது எமக்கு இயந்திர துப்பாக்கியும் தந்து பயிற்சியும் வழங்குங்கள்' என்றார் அவர். (செ-4)

# இலங்கைக்கு எப்போதும் மாலைதீவு ஆதரவு

## அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நாடுகள் மீது மேற்கொள்ளப்படும் தேவையற்ற தலையீடுகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என மாலைதீவு ஜனாதிபதி யாமீன் அப்துல் கையூம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தளத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் மாலைதீவு அரசாங்கம், இலங்கைக்காக குரல் கொடுக்கும் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை தொடர்ந்தும் பாதுகாத்து கொள்ள அர்ப்பணிப்புகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒன்றாக இணைந்து செயற்படுவதன் மூலம் பிராந்தியத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வுகளை காணமுடியும் எனவும் மாலைதீவு ஜனாதிபதி கூறியதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சர்வதேச ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ பயணமாக மாலைதீவு சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் யாமீன் அப்துல் கையூமுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம் பெற்றது. இதன் போதே மாலைதீவு ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சர்வதேச தளத்தில் மாலைதீவு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது நன்றி தெரிவித்து கொண்டார்.

அத்துடன் மாலைதீவில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (செ-11)


# மரண அறிவித்தல்

## பரமு திரவியநாதன் (துயா)



சோனவடலி கரணவாய் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு திரவியநாதன் (துயா) அவர்கள் நேற்று (26.06.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமு - செல்லப்பாக்கியம் தம்பதிகளின் மகனும், கிருஷ்ணவேணி, கிருஷ்ணலீலா (லண்டன்), தவச்செல்வம் (அமரர்), கோபிகா ஆகியோரின் சகோதரனும், அருந்தவராசாவின் மருமகனும், சத்தியமூர்த்தி (கிளி), சுயேந்திரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கீர்த்தனா, கிருஷிகா, ஜிவியன், பிரஞ்சீவ் (லண்டன்), யர்மினா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மண்டான் பூவரந்திட்டி இந்து மயானத்திற்கு முற்பகல் 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல் !

சோனவடலி,
கரணவாய் மேற்கு.

சீ.அருந்தவராசா (மாமன்)

(இ-7755)


# அரசை தூக்கியெறிய மக்கள் தயார்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை முற்றாக சுரண்டிக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை தூக்கியெறிய பொதுமக்கள் தயாராக இருப்பதாக கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ குழு தலைவர் கரு ஜயசூரிய இது தொடர்பில் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை திசை திருப்புவதற்கும், தமது வாக்கு வங்கியைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் இனக்கலவரங்களை தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கின்றது.

மறுபுறத்தில் ஜனாதிபதியும் அவரது புதல்வர்களும் மோட்டார் பந்தயங்களை நடத்தி, பொதுமக்களின் வரிப்பணத்தை வீணாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு பொதுமக்கள்பற்றி எந்தக் கவலையும் இல்லை.

சிறுபான்மை மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் கீழ் எந்தவித பாதுகாப்பும் இல்லை. தொடர்ச்சியான அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

இந்நிலையில் மிக விரைவில் இந்த அரசாங்கம் தூக்கியெறியப்படும். பொதுமக்கள் அதற்காக ஒன்றுபட்டு தயார் நிலையில் இருக்கின்றார்கள் என்றும் கரு ஜயசூரிய தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-11)


# முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2014/2015

புதிய பிரிவு ஆரம்பம்

ஆறுதல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியானது கடந்த மூன்று வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்திருக்கின்றது. அடுத்த வருடத்திற்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலய மட்டத்தில் இரு தேசிய மொழிகளிலும் ஆரம்பமாகவிருப்பதனால் ஆர்வமும், விருப்பும் உடைய க.பொ.த (சா/த) ஐ பூர்த்தி செய்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். தங்கள் வலய முன்பள்ளிக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை யூலை 05 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம். விரும்புவோர் எமது பணிமனையுடனும் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவத்துக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.**

**விண்ணப்ப முடிவு திகதி : 30.06.2014**

✦ மேலதிக தகவல்களுக்கு 0212217092 தொடர்பு கொள்ளவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு முன்னோடித் தேர்வு நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல்பீட தமிழ் மாணவர்களால் நூலகம் நிறுவனத்தின் பள்ளிக்கூடம் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து வருடாந்தம் நடத்தப்படும் க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞான் மாணவர்களுக்கான முன்னோடித் தேர்வு நாளை சனிக்கிழமை முதல் ஜூலை மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இம் முன்னோடித் தேர்வானது 5 ஆவது முறையாக 14 மாவட்டங்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப்பட்டு மாணவர்களுக்கு புள்ளித்திட்டத்துடன் வழங்கப்படும்.

தேர்விற்குத் தோற்றும் மாணவர்கள் இசற் புள்ளி அடிப்படையில் மாவட்ட ரீதியாகவும் அகில இலங்கை ரீதியாகவும் வரிசைப்படுத்தப்பட்டு பெறுபேறுகள் இணையத்தளம் வழியாகவும் ஊடகங்கள் வழியாகவும் வெளியிடப்படும்.

மேலும் கல்வி நிலையில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் நன்மை கருதி வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல்களும் ஒழுங்குசெய்யப்படவுள்ளன.

பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாணவர்களும் பாடசாலைகளிலோ தனியார் கல்வி நிலையங்களிலோ பரீட்சையை நடத்த விரும்புகின்றவர்களும் எம்மை தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு web-www.moraetamils.org மூலமோ அல்லது e-mail-moraetamils 2016 @gmail.com மூலமோ அல்லது 0778898629 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தகவல்களைப் பெறமுடியும்.

இம் முன்னோடித் தேர்வுகள் யாழ். இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, யாழ். ஹாட்லி கல்லூரி, யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார் புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், மன்னார் புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயம், வுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாசம் மகளிர் கல்லூரி, வவுனியா விபுலானந்தா கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, பளை மத்திய கல்லூரி, முல்லைத்தீவு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முள்ளிவளை வித்தியானந்தா கல்லூரி கிண்ணியா மத்திய கல்லூரி திருகோணமலை, புனித மரியாள் கல்லூரி திருகோணமலை, நுவரெலியா ஹைலண்ஸ் கல்லூரி, ஹட்டன் கதிரேசன் மத்திய கல்லூரி நாவலப்பிட்டி, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்த்தர தேசிய பாடசாலை, மட்டக்களப்பு பட்டிருப்பு மகாவித்தியாலயம், கல்முனை பாத்திமா கல்லூரி, காரைதீவு விபுலானந்தா கல்லூரி, அக்கரைப்பற்றுராமகிருஷ்ணகல்லூரி, தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயம், பல்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, விவேகானந்தா இந்துக்கல்லூரி ஆகியவற்றில் பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நடைபெறும். (அ-2)

# இன, மத உணர்வுகளை தூண்டும் உரைகளுக்கு தடை விதிக்க வேண்டும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

**இன, மத உணர்வுகளை தூண்டும் விதத்திலான உரைகளுக்கு தடை விதிக்க வேண்டுமென தான் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் இதுவரையில் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படவில்லையென சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.**



நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இவ் அமைச்சரவை பத்திரம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு கலந்துரையாடப்பட வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டுக்குள் இன, மத உணர்வுகளை துண்டிவிடும் விதத்திலான உரைகள் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு தடை விதிக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்படாததால் மதங்களின் மற்றும் இனங்களின் பெயரால் இயக்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

தமது குறுகிய நோக்கங்களை அடைவதற்காக அவ்வாறு ஆரம்பிக்கப்படும் அமைப்புக்களும் இன, மத உணர்வுகளை துண்டும் விதத்தில் கூட்டங்களை நடத்தி மக்கள் மத்தியில் உணர்வுகளை தூண்டிவிட்டு இறுதியில் அது மத, இன மோதல்களாக வெடிக்கின்றன.

எனவே, தான் இதனை தடை செய்ய வேண்டுமென வலியுறுத்தி பல மாதங்களுக்கு இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை முன்வைத்தேன்.

ஆனால், இன்று வரை அது அமைச்சரவை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படாது காலம் கடத்தப்பட்டு வருகிறது.

தற்போது நாட்டுக்குள் தோன்றியுள்ள மதங்களுக்கிடையேயான மோதல்களை தடுப்பதற்கு நான் முன்வைத்த அமைச்சரவை பத்திரம் உதவும். எனவே, அவசரத் தேவையாக கருதி எனது அமைச்சரவைப் பத்திரத்தை நிகழ்ச்சி நிரலல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இளைஞரை கைது செய்ய இன்டர் போலின் உதவி

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்ட, கனடாவில் உள்ள தமிழ் இளைஞர் ஒருவரை கைது செய்வதற்கு இலங்கை பொலிஸார் இன்டர்போலின் உதவியை நாடியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த தமிழ் இளைஞன் விடுதலைப்புலிகளுடன்தொடர்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வவுனியா மேல் நீதிமன்றம் ஏற்கனவே பிடியாணை பிறப்பித்திருந்தது.

வவுனியா பகுதியைச் சேர்ந்த இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக கப்பல்கள் மூலம் ஆயுதங்களை கடத்தி இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

1996, 97 மற்றும் 99ஆம் ஆண்டுகளில் அவர் மூன்று தட்வை இவ்வாறு ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராகவே வவுனியா நீதிமன்றம் அவருக்கு பிடியாணை பிறப்பித்திருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர் 2005 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து கனடாவுக்கு தப்பிச் சென்றதாகவும், எனவே அவரை கைது செய்ய கனடாவிடம் உதவி கோரி இருப்பதாகவும் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இன்டர்போல் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்வதற்கு சிவப்பு அறிக்கை பிடியாணை பிறப்பித்துள்ளனர். சந்தேக நபர் கைது செய்யப்பட்ட பின்னர் அவர், கனடாவிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்படுவார் என்றார். (அ-2)

# கும்பாபிஷேகம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இதற்கான ஆரம்பக் கிரியைகள் நாளை சனிக்கிழமை அதிகாலை 5.41 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும்.

தொடர்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு ஆரம்பமாகி மறுநாள் புதன்கிழமை மாலை 4 மணிக்கு நிறைவடையும்.

இப் பெருவிழா நடை பெறும் ஏழு நாட்களும் இரவு நேரங்களில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளதாக இணுவில் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா சபையின் தலைவர் செ. சோதிப் பெருமாள் அறிவித்துள்ளார். (2)

# இராசி பலன்

27-6-2014

(ஆனி 13, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

அமாவாசை பிற்பகல் 1.48 மணிவரை

திருவாதிரை முழுவதும்

இராகுகாலம் -10.25-11.55 மணிவரை

சுபநேரம் - 5.55-7.25 மணிவரை

வளவன்

**மேடம்** — சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், பகை ஒன்று நட்பாகலாம்.

**இடபம்** — வருமானம் அதிகரிக்கும் நாள் வியாபார விருத்தி உண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறு துணை புரியும்.

**மிதுனம்** — பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** — சுப செலவுகள் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள்.

**கன்னி** — புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்** — தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சிலர் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், வெளியூர் பயணங்களால் ஆதாய முண்டு.

**விருச்சிகம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உங்களின் செயற்பாடுகளில் பெரியவர்கள் குறை கண்டு கூறலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** — குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம்.

**மகரம்** — சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், மனையில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கும்பம்** — பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**மீனம்** — உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், தொலைபேசி மூலம் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூசணி அம்மன் கொடியேற்றம் நாளை

(யாழ்ப்பாணம்)


நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை முத்துச்சப்பறத்திருவிழா இடம்பெற்று 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு கைலாயக்காட்சி நடைபெறும்.




தொடர்ந்து 7 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் சிவபூசை கைலாயக்காட்சியும் இரவு திருமஞ்சமும் இடம்பெறும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இரவு பூங்காவன உற்சவத்தை தொடர்ந்து தெப்போற்சவ உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர். (அ)




நன்றி:- மிரர்

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை மாலை வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பறத்திருவிழாவும் இடம்பெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

# தமிழ் மக்களுக்கு விரைவில் தீர்வு கிடைப்பது நிச்சயம்

## ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாம் எதிர்பார்க்கும் விடயங்கள் எல்லாம் எமக்கு கிடைப்பதில்லை. இருந்தும் ஒரு நம்பிக்கையின் நிமிர்த்தம் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

அன்று சுதந்திரத்திற்காக போராடிய நாங்கள் இன்று அடிப்படைத் தேவைகளுக்காக போராடும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோம் என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவத்தார். சமுர்த்தி உத்தியோகத்தர்களது ஏற்பாட்டில் சமுர்த்தி பயனாளிகளுடனான சந்திப்பொன்று வரணி நியாப் பொதுமண்டபத்தில் செந்தூரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழர்களைப் பொறுத்தவரை 35 வருடங்களுக்கு மேல் யுத்தத்துடன் போராடி மீண்டவர்கள். தற்போது மீண்டும் போலி அரசியல் பேசுபவர்களின் கைக்குள் அகப்பட்டு மீள முடியாது தவிக்கின்றார்கள்.

தமிழ்த்தேசியம் பேசுபவர்கள் வாக்காளர்களாகிய உங்களை பல தசாப்தங்களாக ஏமாளிகளாகத்தான் வைத்திருக்கின்றார்கள். நீங்களும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருக்கினறர்கள். தமிழ் மக்களுக்கு மிக விரைவில் ஒரு தீர்வு கிடைக்கத்தான் போகிறது என்பது உண்மை. அதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும். வரவுள்ள சந்தர்ப்பத்தையும் தடுக்க முனைகின்றார்கள் சந்தர்ப்பவாதிகள்.

1987 இல் இந்தியா தந்த தீர்வை பெற்றிருந்தால் இன்று நாம் வளர்ச்சியில் உச்சம் கண்டு உலக வரலாற்றுப் பதிவில் உதாரணம் காட்டும் நாடாக வளர்ந்திருக்கமுடியும்.

தனி நாட்டுக்காக போராடிய அமைப்புகளுள் ஒன்றுதான் எமது அமைப்பும். அதை எட்ட முடியாது என்ற நிலை தெரிந்த போது ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தினுள் நாம் காலெடுத்து வைத்துவிட்டோம்.

கடந்த காலத்தில் புலிகளால் துரோகப்பட்டம் சுமத்தப்பட்டு திட்டமிட்டு அரசியல் பலம் இழக்கச் செய்யப்படவர்கள் நாங்கள். ஆனாலும் நாங்கள் எமது மக்கள் மீது அக்கறை கொண்டு எமது இனம், எமது தேசம் என்ற நிலையிலிருந்து தான் அனைத்து சேவைகளையும் செய்து வருகின்றோம். நாம் குறுகிய அரசியல் எண்ணம் கொண்டு செயற்படுபவர்கள் கிடையாது.

அன்று 13 ஆவது திருத்தச் சட்டததை இந்தியா எமக்கு எடுத்துத் தந்தது. அதை தமிழ்த் தலைவர்கள் எனக் கூறுபவர்கள் எட்டி உதைத்து விட்டனர். தற்போது மறுபடியும் வலுவிழுந்து கிடக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தீர்வை பெறுத்தாருங்கள் என்று கேட்பதுதான் வேடிக்கையான விடயமாக இருக்கின்றது. மக்களாகிய நீங்கள் சிந்தித்து தீர்ப்புக்கூறவேண்டிய காலம் தற்போது மலர்ந்துள்ளது என்றார். (அ-2)

# தோடுகளை திருடிய சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் கைது

(கரணவாய்)

நகை மாடம் ஒன்றில் கவறிங் தோட்டை நகைப் பெட்டியினுள் வைத்து விட்டு தங்கத்தோடு ஒரு சோடியை திருடிய சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்திலுள்ள நகை மாடம் ஒன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மோட்டார் சைக்கிளில் வந்த இரு பெண் களும் நகை கடைக்குள் தோடுவாங்கச் சென்றுள்ளனர்.

கடையில் தோடுகளை பார்ப்பது போல நடித்து பெறுமதிமிக்க ஒரு சோடி தோட்டை தமது பைக்குள் வைத்த தாகவும் அதற்குப் பதிலாக வேறொரு சோடி கவறிங் தோட்டை அப்பெட்டியினுள் வைத்ததாகவும் இதனை அவதானித்த உரிமையாளர் இருவரையும் பிடித்து நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து இரு பெண்களையும் பொலிஸார் விசாரித்துள்ளனர்.

ஆனால் அந்தக்குற்றச்சாட்டை பெண்கள் ஏற்கவில்லை.

இதனால் இருவரையும் கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளினையும் தம்முடன் எடுத்துச்சென்றுள்ளனர்.

தற்போது இரு பெண்களும் நெல்லியடி பொலிஸ்பிரிவு தடுப்புக் காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2-60)

# இந்திய மீனவர்கள் 24 பேர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 19 ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்ட 24 இந்திய மீனவர்களும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைவாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின் குமாரினால் நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் வந்த 6 படகுகளையும் வலைகளையும் தொடர்ந்து தடுத்து வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

இந்தியா புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டணத்திலிருந்து 6 படகுகளில் வந்த 24 மீனவர்களையும் யாழ். நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை கடற்படையினர் கைது செய்தனர்.

தொடர்ந்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறையினர் குறித்த மீனவர்களை அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே குறித்த மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களைப் பொறுப்பேற்றுக் கொண்ட யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தினர் இலங்கை கடற்படையினர் ஊடாக இந்தியாவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-6)

# கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் இதில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (2)



வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் வேண்டுகோளுக்கமைய வடமாகாண பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜெய சுந்தர ஏற்பாட்டில் போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நேற்று யாழ். நூலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. இதன்போது வடமாகாண ஆளுநர் உட்பட விருந்தினர்களையும் நிகழ்வில் இடம்பெற்ற விழிப்புணர்வு நாடகத்தினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இனவாதத்தை உருவாக்கும் பின்னணியில் அரசு செயற்படுகின்றது

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

**அளுத்கம தர்கா நகர் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் அரசாங்கமே உள்ளது. இந்த நாட்டில் இனவாதத்தை உருவாக்கி இனங்களை மோத விடுகின்ற வேலையை ராஜபக்ஷவின் குடும்பம் மேற்கொண்டு வருகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

"அளுத்கம தர்காநகர் பகுதிகளில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு முழுப் பொறு ப்பையும் அரசாங்கமே ஏற்க வேண் டும். இனங்களை மோத விட்டு அதனூடாக அரசியல் நடத்தும் வேலைகளையே அரசா ங்கம் செய்து வருகின்றது" என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மட் டக்களப்பு மாவட்ட அலுவலகம் பாலமுனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இன்று மக்கள் மாற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் பக்கம் மக்கள் நாளாந்தம் வந்து கொண்டிருக்கின்றனர்.

இனவாத, மதவாத அடிப்படைவாதிக ளால் இழைக்கப்படும் துரோகத்தை வளர்க் கும் பொறியில் சிக்கி விடக்கூடாது.

பொறுமையாகவும் அமைதியாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும். சிங்க ளவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறு பாட்டுக்கு அப்பால் தேசிய ஒற்றுமைக்காக ஒன்று படவேண்டும்.

இலங்கையில் ஏழைகள் அதிகம் நிறை ந்த மற்றும் வறுமை கூடிய முதலாவது மாகாணம் ஊவா மாகாணமாகும். இந்தப் பட்டியலில் இரண்டாமிடத்தை கிழக்கு மாகாணமும் மூன்றாமிடத்தை வடக்கு மாகாணமும் பெறுகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்ன ணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ராமலிங்கம் சந்திரசேகர் உரை யாற்றுகின்றார்.

ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் செய் தியை கடந்த மாகாண சபை தேர்தல் முடி வுகள் வெளிப்படுத்தியுள்ளன. அரசின் மீது மக்களின் எதிர்ப்பு அதிகரித்து வருகின்றது. மக் கள் மத்தியில் அராஜகத்தை கட்ட விழ்த்து விட்டு மக்களை மோதவிடுகின்ற இந்த ராஜ பக்ஷ குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்பு வதற்கு மக்கள் ஒன்றுபட்டு விட்டார்கள்.

யுத்தம் முடிந்து ஐந்தாண்டுகளில் இந்த நாட்டில் பொருட்களின் விலை பாரியளவு அதிகரித்துள்ளது. அரிசி, மீன் மற்றும் மரக்கறி என அனைதது பொருட்களின் விலைகளும் பல மடங்கு அதிகரித்துள்ளன.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு 25 ஆயிரம் ரூபா செலவுக்காக தேவைப்பட்டது. தற்போது 49ஆயிரம் ரூபா் பணம் மாத மொன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு தேவை ப்படுகின்றது.

நாட்டில் அரசாங்க மற்றும் தனியார் உத் தியோகத்தர்களுக்கு எவ்வித நிவாரணமோ முன்னேற்றமோ இல்லை என்றார். (அ-2)

## இந்திய மீனவர்கள் 11 பேர் விளக்கமறியலில்

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பிற் குள் அத்து மீறி நுழைந்த மீன்பிடி யில் ஈடுபட்ட இந்தி யாவின் தமிழகம் புதுக்கோட்டையைச் சேர்ந்த 11 மீன வர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு ஊர் காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெக தாப்பட்டி னத்தைச் சேர்ந்த 11 மீன வர்களும் 3 படகுக ளில் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண் டிருந்தனர்.

அத்துமீறி நுழைந்த குற்றச்சாட் டில் இவர் கள் நேற்று முன்தினம் அதிகாலை இலங் கைக் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்கள் 11 பேரும் கடற்றொ ழில் நீரி யல் வளத்துறை அதிகாரி களிடம் அன்றைய தினம் ஒப்படை க்கப்பட்டனர். இவர்களை ஊர்கா வற்றுறை நீதிமன்றில் நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலை யில் முற்படு த்தினர். இதன்போது மீனவர்கள் அனைவரை யும் எதிர்வ ரும் 11 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டார். (எ-6)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

*பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங் கள். இரகசியங்களைப் பேணுவோம்*

*காலை 9.00 - பி.ப 1.00*

**கைகொடுக்கும் நண்பர்கள்**

*104,4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*

*021 222 8117*

(C-7745)


## சுதர்சனக்கிரியா பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வாழும் கலை அமைப்பின் வாழும் கலைப் பயிற்சி எடுத்தவர்களுக்கான சுதர் சனக்கிரியா பயிற்சி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு மகேஸ்வரன் மண்டபத் தில் நடைபெறும்.

எனவே பயிற்சி எடுத்தவர்கள் அனை வரையும்கலந்துபயன் பெறுமாறு மேற்படி அமைப்பு கேட்டுள் ளது. (2)


**ஆலய திருவிழாக்களில் நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை குழுவினரை அழைக்க விரும்புகிறீர்களா?**

*தொடர்பு:-கலைமாமணி Dr. S.S. சர்மா (குருஜீ)*

**0777064247**

*முருகமூர்த்தி கோவில் -சங்கானை*

(6928)


## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை ஸ்ரீ முனிஸ்வரன் தேவ ஸ்தானத்தின் மண வாளக்கோல அலங் கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம் பமாகவுள் ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை சப்ப றத்திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க்கி ழமை தேர்த்திரு விழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கி ழமை தீர்த்த உற் சவம் இடம்பெற்று மறுநாள் வியாழக்கி ழமை வைரவர் சாந் தியுடன் விழா நிறைவ டையும் எனஆலய பரிபாலன சபையி னர் அறிவித்துள்ள னர். (2)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம்:-10, ஆதன இலக்கம்:- 65 (புதிய பதிவு)
நவாலி றோட்

வட்டாரம் 10 நவாலி றோட் ஆதன இலக்கம் 65 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை "மல்லன் குடியிருப்பு வளவு" ) என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 05 குளி 9.14 கொண்ட இவ்வாதனமானது நவாலியைச் சேர்ந்த யேசு தாசன் பரமானந்தம் ஆகிய இவர் தனது மகளாகிய ஞானப்பிரகாசம் உதயதாஸ் பெண் லோறல் விநோதினி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு. இரா. செந்தசேனன் முகதாவில் நிறைவேறிய 9831 ஆம் இலக்க 2013.12.22 ஆம் திகதிய, 9885 ஆம் இலக்க 2013.12.22 ஆம் திகதிய நன்கொடை உறுதிகள் மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்து வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "மல்லன் குடியிருப்பு வளவு" நிலப்பரப்பு 05 குளி 9.14 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ஞானப்பிரகாசம் உதயதாஸ் பெண் லோறல் விநோதினி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (6957)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.


இவர்களுக்கு **மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 43<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: B/1526 | பிறப்பு: 1958 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 29.5<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/2174 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 14.5 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம் (UK – Student Visa)<br>தொ.இ: B/1529 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 19 .25<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2175 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 57 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L / (Student Visa)<br>தொ.இ: B/1534 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 26.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/2178 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 39<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDIT / பிரான்ஸ் (Not PR)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/1535 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 61.5 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி / பொறியியலாளர் (கனடா சிற்றிசன்)<br>தொ.இ: G/2179 |

**கல்யாண மாலை**

**(சர்வதேச திருமண சேவை)**

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**

**தொடர்பு:- 021 720 1005**

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்த வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நெல்லியடி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கென புதிய பேருந்தை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மத்திய கல்லூரியில் கடந்த 24ஆம் திகதி மகிந்தோதயம் தொழில்நுட்ப பீடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் சேதுராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைச் சமூகத்தினர் மட்டுமல்லாது எமது மக்கள் கிடைக்கின்ற வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

வடமாகாண மக்களுக்கு அரசிடமிருந்து எதனைப் பெற்றுக் கொடுக்க முடியுமோ அவற்றை நாம் பெற்றுக்கொடுத்து வருகின்றோம். இது இணக்க அரசியல் ஊடாகவே சாத்தியமாகின்றது.

இப்பாடசாலை சமூகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளின் மேம்பாட்டுக்காக புதிய பேருந்து ஒன்று விரைவில் பெற்றுத் தரப்படும்.

அரசின் இவ்வாறான அபிவிருத்தி மேம்பாட்டு செயற்றிட்டங்களை மென்மேலும் வலுப்படுத்துவதே எமது நோக்கமாகவுள்ளது.

எமது அரசு மக்களின் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் கருத்திற் கொண்டு எவ்விதமான பாரபட்சமுமின்றி உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது எனத் தெரிவித்த அமைச்சர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியற்துறைகளை கிளிநொச்சி அறிவியல் நகரில் ஆரம்பித்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் புஸ்பலிங்கம், யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கலாமணி, பிரதி அதிபர்களான கிருஸ்ணகுமார், அரியரட்ணம், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் உள்ளிட்ட கல்விப்புலம் சார்ந்தோர் கலந்து கொண்டனர். (2-60)

# மத முரண்பாடுகளை தூண்டும் பிக்குகள் தண்டிக்கப்பட வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

மத முரண்பாடுகளை தூண்டும் பௌத்த பிக்குகள் தண்டிக்கப்பட வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆண்டுகள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீளவும் இருண்ட யுகத்திற்குள் அழைத்துச் செல்ல எவரும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என திஸ்ஸ விதாரண சிங்கள பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இன, மத முரண்பாடுகளை தூண்டும் வகையில் செயற்படும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக அந்தந்த பீடங்களைச் சேர்ந்த மாநாயக்கத் தேரர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான பௌத்த பிக்குகளுக்கு எதிராக சட்ட ரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் இடதுசாரி கட்சிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. (2)

# கடற்படை தளபதியாக ஜயந்த பெரேரா

இலங்கை கடற்படையின் அடுத்த தளபதியாக ரியர் அட்மிரல் ஜயந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் கடற்படையின் தலைமை அதிகாரியாக பணியாற்றும் இவர், எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இலங்கை கடற்படையின் தளபதி யாக பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார்.

ரியர் அட்மிரல் ஜயந்த பெரேரா 1978ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி இலங்கை கடற்படையில் இணைந்து கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)




உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்கு அமைவாக வடமராட்சிதெற்கு மேற்கு பிரதேச சபை நடத்திய வடமராட்சிப் பிரதேச பாடசாலைகளுக்கிடையிலான கோலப்போட்டி அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றபோது... (படம்:-கரணவாய் செய்தியாளர்)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 80-160 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400-480 | 450 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 140 | 100 | 160 |
| கரட் | 170 | 140 | 200 |
| பூசணி | 90 | 80 | 80 |
| புடோல் | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 45-60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-130 | 80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 170 | 120 |
| வெண்டிக்காய் | 80-100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 100 |
| பயற்றங்காய் | 80-100 | 150 | 120 |
| லீக்ஸ் | 70 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 130 | 100 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80-120 | 180 | 160 |
| போஞ்சி | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-110 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 90-120 | 120 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 57

சாரு நிஷா




சுபா சீதன்




RM சங்கர்




துர்ஷி துஷி துஷ்




ஹார்ட் பெயின்




சச்சி சங்கீத்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதே தற்காலத்தின் தேவை

## மனிதவுரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டு



**(கொழும்பு) இலங்கை மனிதவுரிமை விவகாரம் குறித்து விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவானது பல நாடுகளுக்கும் சென்று சாட்சிகளை பெறும் என்பதுடன் இந்தியாவின் தமிழகத்துக்கும் விஜயம் செய்து சாட்சியங்களை பெறும் சாத்தியம் உள்ளது என்று இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.**

இலங்கை மனிதவுரிமை நிலைமைகள் குறித்து விசாரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவானது எதிர்வரும் ஜூலை மாதம் மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் சாட்சியங்களை பெறவுள்ளமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றி காணாமற் போனோர் பிரச்சினைக்கு தீர்வைக் கண்டு உள்ளக செயற்பாட்டை முன்னெடுத்தால் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணைக் குழுவின் விசாரணை அறிக்கையை வலுவிழக்கச் செய்ய முடியும்.

நவீன முறைமைகளை கையாண்டு ஐ.நா. விசாரணைக் குழு விசாரணைகளை நடத்தும் என்பதுடன் சாட்சியங்களையும் பெற்றுக் கொள்ளும்.

இலங்கை நிராகரிப்பு இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைவர் என்ற வகையில் இந்த கருத்தை நான் முன்வைக்கவில்லை. மாறாக தனிப்பட்ட மனிதன் என்ற வகையில் எனது யோசனையை இந்த தீர்க்கமான கட்டத்தில் முன்வைக்கின்றேன்.

அதாவது இலங்கை குறித்து விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை பேரவை விசாரணை குழுவை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஆனால் அந்தப் பிரேரணை மற்றும் விசாரணை செயற்பாடுகளை நிராகரிப்பதாக இலங்கை திட்டவட்டமாக கூறிவிட்டது.

**திட்டவட்டம்**

குறிப்பாக பிரேரணை நிறைவேற்றப்பட்டபோதும் விசாரணைக் குழு குறித்த அறிவிப்பின் போதும் இலங்கையின் சார்பில் மனித வுரிமைப் பேரவையில் உரையாற்றிய இலங்கை பிரதிநிதி அவற்றை முழுமையாக நிராகரிப்பதாக கூறினார்.

அத்துடன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிசும் பிரேரணையை இலங்கை நிராகரிக்கின்றது என்றும் ஏற்றுக்கொள்ளாது என்றும் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டார்.

**பாராளுமன்றம் நிராகரிப்பு**

இவை எல்லாவற்றுக்கும்மேலாக இலங்கையில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவை விசாரணைகளை நடத்தக்கூடாது என்று பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதாவது பிரேரணையையும் விசாரணைக குழுவையும் இலங்கையின் பாராளுமன்றமும் நிராகரித்து விட்டது.

**தமிழகம் வரலாம்**

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவை இலங்கைக்கு விஜயம் செய்யாது. மாறாக உலக நாடுகளுக்கு சென்று சாட்சியங்களை ஆராயும் நிலைமையே காணப்படுகின்றது.

அந்தவகையில் பல நாடுகளுக்கும் விசாரணைக் குழு விஜயம் செய்யும். குறிப்பாக இந்தியாவின் தமிழகத்துக்கும் இந்தக் குழு விஜயம் செய்து சாட்சியங்களை பெறும் சாத்தியம் காணப்படுகின்றது.

**2015 இல் அறிக்கை**

இவ்வாறு விசாரணைகளை நடத்தி முடித்த பின்னர் விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு மனிதவுரிமைப் பேரவையின் 28 ஆவது அமர்வுக்கு சமர்ப்பிக்கப்படும். அதன் பினனர் அறிக்கையை எங்கு சமர்ப்பப்பது என்பதனை மனிதவுரிமைப் பேரவை தீர்மானிக்கும்.

குறிப்பாக அறிக்கையை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக்கு சமர்ப்பிக்கலாம். அங்கு எமக்கு சீனாவும் ரஷ்யாவும ஆதரவு வழங்கும். ஆனால் லிபியா விடயத்தில் என்ன நடந்தது என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

**வலுவிழக்கச் செய்யலாம்**

இந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் விசா ரணை செயற்பாட்டை வலுவிழக்கச் செய்யவும் அதன் விசாரணை அறிக்கையை செயலிழக்கச் செய்யவும் ஒரே வழிதான் உள்ளது.

அதாவது கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றவேண்டும். இந்த விடயத்தில் நாங்கள் முன்னேற்றத்தை வெளிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

அத்துடன் காணாமற் போனோர் பிரச்சினைக்கு தீர்வைக்காண வேண்டும். தற்போது இது தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டு விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றன.

**உள்ளக செயற்பாடு முக்கியம்**

எனவே இந்த செயற்பாட்டை சிறப்பாக முன்னெடுத்து தீர்வை முன்வைக்கவேண்டும். இவ்வாறு உள்ளக செயற்பாட்டை உரிய முறையில் முன்னெடுத்தால் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணைக் குழுவின் விசாரணையை, அறிக்கையை வலுவிழக்கச் செய்யமுடியும்.

எனவே இந்த விடயத்தை நோக்கி நாடு பயணிக்க வேண்டியது அவசியமாகும்.

**நவிப்பிள்ளை அறிவிப்பு**

கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவையின் 26ஆவது அமர்வில் உரையாற்றிய மனிதவுரிமை ஆணையாளர் நவிப்பிள்ளை இலங்கையில் பொறுப்புக்கூறலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான பரந்துபட்ட விசாரணையை மேற்கொள்வதற்கான நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள் உள்ளடங்கிய விசாரணைக் குழுவை நியமித்துள்ளதாக குறிப்பிட்டார். (2)






உள்ளூராட்சிவார நிகழ்வுகளை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வினோத உடைப் போட்டி அண்மையில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தால் நடைபெற்றது. இதன்போது நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட விருந்தினர்களையும் போட்டியில் பங்கு பற்றிய முன்பள்ளி மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# அளுத்கம வன்முறை சம்பவம் தொடர்பில் 68 பேர் கைது

## பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அளுத்கம சம்பவம் தொடர்பில் இதுவரை 68 பேர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை 44 பேரை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை பாணந்துறை நோலிமிட் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,



கடந்த 15 ஆம் திகதியன்று அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட 68 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு 44 பேரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர். குறித்த சம்பவங்களை விசாரணை செய்வதற்காக 20 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த சம்பவங்கள் தொடர்பில் இறுவெட்டு உள்ளிட்ட ஆதாரங்கள் இருக்குமாயின் பொலிஸாரிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

அத்தோடு ஆட்டுப் பண்ணையொன்றை தீ வைத்த 30 பேரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் கோழிப் பண்ணையொன்றில் கொல்லப்பட்டிருந்த சிவலிங்கம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று பாணந்துறை நோலிமிட்டில் தீயிடப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைக் குழுக்களின் அறிக்கை இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்டவில்லை, சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்தோடு அளுத்கம வன்முறை தொடர்பில் கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக தராதரம் பாராமல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# உயர்தர மாணவர்களுக்கான வினாத்தாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு க.பொ.த. உயர் தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு உதவும் முகமாக இலங்கைப் பரீட்சை திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட பரீட்சை வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாகாணக் கல்வி பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ், சிங்களம், மறுநாள் செவ்வாய்க் கிழமை கணக்கியல், இணைந்த கணிதம், 2 ஆம் திகதி புதன்கிழமை பொருளியல், மறுநாள் வியாழக் கிழமை வணிகக்கல்வி, உயிரியல், 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பௌதிகவியல், விவசாயம், மறு நாள் சனிக்கிழமை இராசயனவியல் ஆகிய பாடங்களுக்கான கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இவ்வாண்டு நடைபெறவுள்ள இப்பரீட்சை மிகப் பயன்மிக்கதாகையால் மாணவர்கள் தங்கள் பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றுவதுடன், வலயக் கல்வி அலுவலகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்குகளிலும் தவறாது பங்குபற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

வினாத்தாள்களுக்கான புள்ளி வழங்கும் திட்டமும் கருத்தரங்கின் போது ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும் எனவும் அவர் கேட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# டொம் வருது............ டொம் வருது..............!

ஒரு காட்டில் முயல்குட்டி ஒண்ணு இருந்துச்சாம். ஒரு நாள், அதுக்கு சரியான விருந்து கிடைச்சது. கேரட், தக்காளி, முட்டைக்கோஸ் எல்லாத்தையும் ஒரு பிடி பிடிச்சது. சலுசிலுனு காத்து வர்ற ஓடக்கரை பக்கமா வந்துச்சு. "மெத மெத்" புல்வெளியில் படுத்தது. அடுத்த நிமிஷமே ஆனந்தமா தூங்கிருச்சு.

கொஞ்ச நேரம் போனதும், "டொம்'னு ஒரு சத்தம். "ஏதோ கனவு"னு அரைத் தூக்கத்தில் புரண்டு படுத்துச்சு. மறுபடியும் "டொம்' சத்தம். "என்னடா இது?"னு எழுந்து பார்த்துச்சு. ஒண்ணையும் காணோம். மறுபடி கண்ணை மூடிப் படுத்தால், அதே "டொம்' சத்தம். முயல்குட்டி ஏற்கனவே டைனோசர் பத்தி கேள்விப்பட்டு இருக்கு. போதாததுக்கு, நண்பன் குரங்கு வேறு "வித்தியாசமான விலங்குகள்" பற்றிய புத்தகத்தைக் காட்டிப் பயமுறுத்தி இருந்தது. "அந்த மாதிரி ஏதோ வந்துடுச்சோ?"னு முயல் யோசிச்ச சமயம், மறுபடியும் ஒரு "டொம்' சத்தம்.

அடுத்த நிமிஷம் துள்ளி எழுந்த முயல், "அய்யய்யோ! டொம் வருது" னு கத்தியபடியே ஓட ஆரம்பிச்சுது. அப்போ எதிரில் வந்த யானை, "ஹேய்... ஏன் இப்படி ஓடுறே?"ன்னு கேட்டுச்சு.

"டொம் வருது... சீக்கிரம் ஓடு"னு சொல்லிகிட்டே ம்யல்குட்டி ஓடிச்சு. யானையும் "பெயரே பயமுறுத்துற மாதிரி இருக்கே... இங்கே நிக்கிறது சேஃப்டி இல்லை'ன்னு முயல்குட்டி பின்னாடியே ஓட ஆரம்பிச்சது.

இதைப்பார்த்த ஒருகரடி "யானை அண்ணே... எங்கே ஓடுறீங்க?" என்று கேட்டுச்சு.


"விஷயமே தெரியாதா? டொம் வருதாக்கும்" என்று சொல்லிக்கிட்டே ஓடிச்சு யானை. "யானையே பயந்து ஓடுதுனனா. அந்த டொம்கிட்டே நாம மாட்டினா சட்னிதான்"னு அதுவும் ஓட ஆரம்பிச்சது.

இப்படியே ஒட்டகச்சிவிங்கி, மான், குரங்கு, கழுகு, புறா என எல்லாமே, "டொம் வருது... டொம் வருது'னு ஓடினதைப் பார்க்கிறப்ப, விலங்குகள் மாரத்தான் மாதிரி இருந்துச்சு.

எல்லாம் சேர்ந்து சிங்க ராஜா முன்னாடிபோய் நின்னாங்க. "ராஜா... ராஜா டொம் வருது காப்பாத்துங்க" ன்னு அலறினாங்க.

கொஞ்சம் முன்னாடிதான் ராணியோடு சண்டை போட்டு, அந்தக் கடுப்பில் உட்கார்ந்து இருந்தாரு சிங்க ராஜா. அதுக்கு செம கடுப்பு. "டொம்மா... அது யாரு?" ன்னு கேட்டாரு.

"அது பயங்கரமான விலங்கு. யானையைவிட பத்து மடங்கு வெயிட். ஒட்டகச்சிவிங்கியைவிட இருபது மடங்கு ஹைட்... உங்களைவிட நூறு மடங்கு திறமைசாலி"னு ஒரு குரங்கு அடிச்சுவிட்டுச்சு.



சிங்க ராஜாவின் கடுப்பு உச்சி வெயில் மாதிரி கிர்ர்ர்னு ஏறிப்போச்சு. "ஓகோ... அந்த டொம் அவ்வளவு பெரிய ஆளா? அதை ஒரு கை பார்த்துடுறேன்"னு கிளம்பிடுச்சாம்.

முயல்குட்டி வழிகாட்ட, எல்லோரும் ஓடக்கரைக்கு வந்து சேர்ந்தாங்க. அங்கே யாருமே இல்லை. முயல் குட்டியோ... "ஐயோ, அந்த டொம் இங்கேதான் இருக்கு. ஒரு வேளை கண்ணை மூடிக்கிட்டாத்தான் வரும் போலிருக்கு"னு சொல்லிச்சு.

"சரி, எல்லோரும் கண்களை மூடுங்க"னு சொல்லிச்சு சிங்க ராஜா. அப்படியே கண்களை மூடின கொஞ்ச நேரத்துல "டொம்"னு சத்தம்.

"பார்த்தீங்களா.... பார்த்தீங்களா... டொம் வந்துடுச்சு"னு அலறிச்சு முயல்குட்டி.

கண்ணைத் திறந்து பார்த்தால் யாரும் இல்லை. சிங்க ராஜாவுக்கே பயம் வந்துருச்சு. "சரி, இப்போ எல்லோரும் அமைதியா இருந்து கவனிப்போம்:"னு சொல்லிச்சு.

எல்லா விலங்குகளும் கண்களைக் கோலிக் குண்டு கணக்கா முழிச்சுக்கிட்டு கவனிச்சாங்க. முயல்குட்டி மட்டும் பயந்துட்டு கண்ணை மூடிட்டே இருந்துச்சு. அப்போ, "டொம்"னு பெரிய சத்தத்தோடு, ஓடக்கரையில் இருந்த தென்னை மரத்தில் இருந்து, ஒரு பெரிய இளநீர் தண்ணிக்குள்ளே விழுந்துச்சு.

"ஐயோ... டொம் வந்திருச்சு"னு சொல்லிக்கிட்டே முயல் குட்டி கண்ணைத் திறந்து பார்த்துச்சு. எல்லா விலங்குகளும் தன்னையே முறைக்கிறதைப் பார்த்து, அதுக்கு ஒண்ணும் புரியலை.

"ஒண்ணு இல்லே... ரெண்டு இல்லே... எத்தனை டொம உன்னைத் துரத்தப்போகுது பாரு" என்ற சிங்க ராஜா, "ரெடி ஸ்டார்ட்"னு சொல்லிச்சு.

அத்தனை விலங்குகளும் "டொம்... டொம்'னு சொல்லிக்கிட்டே முயல்குட்டியைத் துரத்த ஆரம்பிச்சது. "ஆகா! சாப்பிட்டது எல்லாம் செரிச்சுடும் போலிருக்கே"னு அலறிக்கிட்டே ஓட ஆரம்பிச்சது முயல்குட்டி.

## 06.2014 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1358 - துப்ரோவ்னிக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் பொல்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்சின் படைகளை வென்றான்.
- 1801 - கெய்ரோ நகரம் பிரித்தானியப் படையினரிடம் வீழ்ந்தது.
- 1806 - புவனஸ் அயரசை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- 1950 - கொரியப் போரில் பங்கு பற்றவென ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை அனுப்ப முடிவு செய்தது.
- 1954 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1954 - உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ்கோவுக்கு அருகில் ஓப்னின்ஸ்க் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது.
- 1967 - உலகின் முதலாவது ஏடிஎம் (ATM) லண்டன் என்ஃபீல்டில் அமைக்கப்பட்டது.
- 1974 - அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் சோவியத் ஒன்றியத்துக்கு பயணம் மேற்கொண்டார்.
- 1977 - சிபூட்டி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1979 - முகமது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 1991 - சுலோவீனியா தனது விடுதலையை அறிவித்த இரண்டாம் நாளில் யுகோஸ்லாவியா அதன் மீது படையெடுத்தது.
- 1998 - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.
- 2007 - டோனி பிளேர் பிரதமர் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து கோர்டன் பிறெளன் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.

### பிறப்புகள்

- 1880 - ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (இ. 1968)
- 1922 - அகிலன், தமிழில் ஞானபீட விருது பெற்ற முதல் எழுத்தாளர்
- 1927 - டொமினிக் ஜீவா, ஈழத்தின் எழுத்தாளர், இதழாசிரியர்

### இறப்புகள்

- 1999 - ஜோர்ஜ் பப்படபவுலஸ், முன்னாள் கிரேக்க அரசுத் தலைவர் (பி. 1919)
- 2007 - டி. எம். தியாகராஜன், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1923)
- 2009 - இ. முருகையன், ஈழத்துக் கவிஞர் (பி. 1935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலம், பூராடம்,
உத்தராடம் 1 ஆம் பாதம்

**தொழில் ஸ்தானத்தில் ராகு வர தொழிலில் வளர்ச்சி கூடும்! எதையும் சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற தனுசு இராசி நேயர்களே!**

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையிலேயே எப்பொழுதும் இருப்பீர்கள். தன் வாழ்க்கை தன்னைக் காட்டிலும் பிறருக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் உடையவர்களாக இருப்பீர்கள்.

தயாள குணம் உங்களுக்கு இருப்பதால் தான் கொடுத்த கடனைக் கூட வசூலிக்க முடியாமல் போகிறது. பக்தி மிக்கவர்களாக விளங்குவதால் பணம் கையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் கவலைப்பட மாட்டீர்கள்.

வானவருக்கு அரசன் என்று வர்ணிக்கப்படும் குருபகவான் உங்கள் இராசிக்கு ராசிநாதனாகவும் விளங்குவதால் தேசப்பற்று மிக்கவர்களாகவும் பொதுநலனில் ஈடுபட்டு பொறுப்புகளையும், பதவியையும் வரவழைத்துக்கொள்வதையும் விரும்புவீர்கள். முன்கோபம் உங்கள் முன்னேற்றத்தை தடைசெய்யும். ராகு- கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களையெல்லாம் வழங்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**தொழில் வளத்தைப் பெருக்கும் பத்தாமிடத்து ராகு!**

**தொகைகளை விரயமாக்கும் நான்காமிடத்து கேது!**

இதுவரை துலாம் ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் மேட இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் 21.06.2014 அன்று முதல் 10 ஆம் இடத்தில் முத்தான பலன்தரும் விதத்தில் ராகு வலம் வரப்போகிறார். சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப்போகிறார். இந்த பெயர்ச்சி தொழில் வளத்தைப் பெருக்கும் விதத்திலேயே இருக்கிறது. மூடிக்கிடந்த தொழிலை திறந்து நடத்தவும், புதிய தொழில் தொடங்கவும் வாய்ப்புகள் உருவாகும். சுமார் 1 1/2 வருட காலங்கள் இந்த ராகு- கேதுக்களின் ஆதிக்கம் அமைந்திருக்கிறது.

பாதசாரப்படி கேது நல்ல பலன்களை அள்ளிக் கொடுத்தாலும், இருக்குமிடத்தைப் பொறுத்து பார்க்கும் பொழுது சுகக் கேடுகளையும் அதனால் விரயங்களையும் கொடுப்பதாகவே இருக்கிறது. மன நிம்மதி குறையலாம். மாற்றுக் கருத்துடையோர் அதிகரிக்கலாம். எனவே, உங்கள் சுய ஜாதகத்தில் ராகு- கேதுக்கள் இருக்கும் நிலையறிந்து அதன் பாதசார பலமறிந்து அதற்குரிய ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று சர்ப்ப சாந்திகளைச் செய்தால் தேக நலன் சீராகும். செயற்பாடுகளிலும் வெற்றி கிட்டும்.

கோச்சார ரீதியாக ராகு- கேதுக்கள் உலாவரும் நட்சத்திர அடிப்படையிலும் உங்களுக்குரிய பலன்கள் வந்து சேரும்.

வாரவழிபாடாக தென்முகக் கடவுளை வழிபடுவதோடு பாம்புக் கிரகங்களுக்குரிய தெய்வங்களை வழிபட்டால்தான் அமைதியான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக்கொள்ள முடியும்.

பொதுவாக 10 இல் சஞ்சரிக்கும் ராகு பல விதங்களிலும் நன்மைகளை வழங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பும், வாய்த்த நண்பர்களின் ஒத்துழைப்பும் தங்குதடையின்றி தொழிலை வளப்படுத்த உதவும்.

எங்கு சென்றாலும் உங்களுக்கு செல்வாக்கு மேலோங்கும். பங்கு முதலீடுகள் போடுவதற்கு பலரும் காத்திருப்பர். கடந்து வந்த பாதையைப் பற்றி இனி கவலைப்பட வேண்டாம். புதிய வாழ்க்கை இனி அமையும்.

பணியாளர்கள் கவலை இனி அகலும். பக்குவமாகப் பேசிச் சாதித்துக் கொள்வீர்கள். பழைய தொழிலை ஒருசிலர் லீசுக்கு விட்டு விட்டு புதிய தொழிலில் அடியெடுத்து வைப்பர். அரசியல் ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்கு அதிக பொறுப்புகள் வந்து சேரும். இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்று நிறைந்த மனதோடு வாழ வழிபிறக்கும். தலை தூக்கிய பழைய பிரச்சினைகள் தவிடுபொடியாகிவிடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னத நிலை உருவாகும். பகை, நட்பு மாறும். புகை வண்டிபோல நீண்டுகொண்டே சென்ற கடன் சுமை குறையும்.

**நன்மைகளை வழங்குமா?**

இதுபோன்ற நேரத்தில் ஒருமுறைக்குப் பல முறை எதையும் யோசித்துச் செய்வது நல்லது. குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் வெற்றி என்ற மூன்றெழுத்தை விரைவில் பெறலாம். கேது பரிகாரம் செய்வதும் யோகங்களை வரவழைத்துக் கொடுக்கும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

பத்தாமிடத்து ராகுவால் முத்தான வாழ்க்கை அமையும். சுகஸ்தான ராகுவால் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரலாம். வியாழக்கிழமை தோறும் குருத்ட்சணாமூர்த்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். யோகபலம் பெற்ற நாளில் அருள் வழங்கும் மார்த்தாண்ட பைரவர், வளரொளிநாதர், வடிவுடையம்மனை வழிபட்டு வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ளுங்கள்.

**பாதசாரப்படி ராகு- கேது தரும் பலன்கள்!**

**ராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 24.10.2014 வரை)**

பிள்ளைகள் வழியிலுள்ள பிரச்சினைகள் அகலும். அவர்களின் கல்வி சம்பந்தமான முயற்சிக்கும், திருமண காரியங்களுக்கும் அனுகூலமான நேரமிது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். வெளிநாட்டு முயற்சி வெற்றி தரும்.

பலவற்றையும் செய்து முடிப்பீர்கள். மாசற்ற பொன்னும், மணிவைர ரத்தினமும், ஆசைப்பட்ட அளவிற்கு தொகையும் வந்துசேரும்.

**கேது, புதன் காலில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 25.02.2015 வரை)**

வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அஞ்சல் வழியில் அனுகூல தகவல்கள் வந்து சேரும். தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கும்.

**கேது, சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (26.02.2015 முதல் 04.11.2015 வரை)**

வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். அருமைப் பெரியவர்கள் அருகிலிருந்து ஆலோசனைகளை வழங்குவர். வாட்டி எடுத்த நோய் அகலும். வீட்டு முன்னேற்றம் கூடும். எண்ணம்போல் திருமணம் நடைபெறும். மண், மனை சேர்க்கைகளும் அதிகரிக்கும்.

**கேது, குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

பொன்னான நேரமாகும். புகழ் கூடும். பொன், பொருள் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். கனவுகள் நனவாக நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். ஆரோக்கியம் சீராகும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

**21.06.2014 07.01.2016**



**நான்காமிடத்து கேது!**

பத்தாமிடத்தில் ராகு சஞ்சரிக்கும் அதே நேரத்தில், சுக ஸ்தானமான நான்காமிடத்தில் கேது சஞ்சரிக்கிறார். தனிக் கேதுவாக இருந்தால் சுகக்கேடுகளும், சொல்லைச் செயலாக்கிக் காட்ட முடியாத சூழ்நிலையும் உருவாகும். ஆனால், குரு வீட்டில், கேது சஞ்சரிக்கிறார். அதுமட்டுமில்லாமல் குருவின் பரிபூரண பார்வையும் பெற்று திகழ்கிறார். எனவே, சுபவிரயங்கள் அதிகரிக்கும் என்றே சொல்லலாம். உடல் நலத்திற்காக ஒரு தொகையைச் செலவிட்டாலும் கூட உற்சாகத்தோடு பணிபுரிய ஆரோக்கியம் சீராகும்.


அர்த்தாஷ்டம கேதுவின் ஆதிக்கம் இருக்கும்வரை உடலில் சிறு குறைபாடு ஏற்பட்டாலும் உடனடியாக மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. அதுமட்டுமல்லாமல் வீடு, மனை வாங்க போட்ட திட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படுவதுபோல் தோன்றும். இருந்தாலும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடி வரும். பத்திரப் பதிவில் சில பிரச்சினைகள் உருவாகலாம். பக்கத்து வீட்டாராலும் பிரச்சினை அதிகரிக்கலாம். வசிக்கும் வீடு, ராசியானதாக இருக்குமா, வளர்ச்சி போதுமானதாக இல்லையே என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றும்.

புசிக்கும் உணவில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் பொன்னான உடல்வாகையும் பெற இயலும். தாய்வழிப் பிரச்சினைகள் தலைதூக்கும். மனைவி, மக்கள் வழியிலும் மனக்கசப்புகள் உருவாகலாம். கட்டடப்பணி பாதியில் நிற்கலாம். கனிவோடு வாங்கிய வாகனம் பழுதாகி கவலைப்படுத்தலாம்.

**ராகு, சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.10.2014 முதல் 01.07.2015 வரை)**

மிக, மிக கவனத்துடன் செயற்படுவது நல்லது. தானே தனக்கு எதிரியாகும் சூழ்நிலை உண்டு. விரயங்கள் கூடுதலாக இருக்கும். வல்லவர்களாக இருந்தாலும் நீங்கள் வளைந்து கொடுத்துச்செல்ல வேண்டிய நேர

## தனுசு



மிது. தொழில் ஏமாற்றங்களும் சில சமயங்களில் ஏற்படும்.

**ராகு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (02.07.2015 முதல் 07.01.2016 வரை )**

பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். மதிநுட்பத்தால் மகத்தான காரியங்கள்

**சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள்**

16.12.2014 இல் விருச்சிக இராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். உங்களுக்கு ஏழரைச்சனியின் ஆதிக்கம் வருகிறது. சனி பிடிக்கப்போகிறதே என்று கவலைப்பட வேண்டாம். உங்கள் இராசியைப் பொறுத்தவரை சனி யோகம் தருபவர், தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர், பணபலத்தையும் கொடுத்து, சகாயத்தையும் வழங்குவார். இனத்தார் பகையை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. இரண்டாவது சுற்று நடப்பவர்களுக்கு இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். விரயச் சனி காலத்தில் சுப விரயங்களைச் செய்வது நல்லது.

**குருப்பெயர்ச்சி!**

ராகு-கேது பெயர்ச்சிக்கு முன்னதாகவே குரு பெயர்ச்சியாகிவிட்டது. உங்களைப் பொறுத்தவரை அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குரு இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவற்றை உருவாக்கலாம். உச்ச குருவின் பார்வை பலனால் தனவரவு திருப்தி தரும். தாராளமாக செலவிட்டு மகிழ்வீர்கள்.

05.07.2015 அன்று சிம்ம இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். அந்த குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவாகிறது. எனவே, அதன்பிறகு ஓராண்டு காலத்திற்கு உன்னதமான பலன் வந்து சேரும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் அதிகரிக்கும்.

நாளை மகரம்.....

**ஜோதிடக் கலைமணி**
**-சிவல்புரி சிங்காரம்-**

## தொழில் ஸ்தானத்தில் ராகு வர தொழிலில் வளர்ச்சி கூடும்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# வெகுசனத் தொடர்பூடகங்களும் சமூகத்தில் அவற்றின் செயற்பாடுகளும்

இன்றைய நவீனவுலகிலே ஒருவரோடொருவர் இடைவினை கொள்ளல் என்பது தவிர்க்க முடியாததொன்றாக அமைந்து விட்டது.

தொடர்பாடலின் வழி முகிழ்த்த வெகுசனத தொடர்பூடகங்கள் (Mass media) பெருந் தொகையான எண்ணிக்கையினரைக் கருத்திற் கொண்டு படைக்கப்படுபவையாகும்.

பொதுவாக எம்மவர் மத்தியில் வெகுசனத் தொடர்பூடகங்கள் என்றால் ஏதோ பொழுதுபோக்கு சாதனம் என்ற படிமத்தையே உடனடியாக உள்வாங்கும் நிலை காணப்படுகின்றது. ஆனால் அவை சமூகத்திலே அரசியல், சமூகப் பொருளாதார, பண் பாட்டு ரீதியாகப் பல செயற்பாடுகளினை மேற்கொண்டு வருகின்றன.

நடைமுறை வாதிகளும் அறிஞர்களும் சமூகத்தளத்திலே பற்பல செயற்பாடுகளுக்கு இன்றியமையாதனவாக வெகுசனத் தொடர்பூடகங்கள் உள்ளன என்ற கருத்தை முன்வைத்து, அவற்றினைக் கோட்பாடுகளின் வழி நிரூபித்துமுள்ளனர்.

நாளாந்த வாழ்விலே மீடியா என்கின்றபோது அவை பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக் காட்சி என்றுதான் புரிந்து கொள்கின்றோம்.

ஆனால் பண்பட்ட சிந்தனையாளனோ அல்லது அறிஞனோ அவற்றினை அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் நாட்டாரியல் ஊடகம் என்ற வகைப்படுத்தலுக்குட்படுத்தி நோக்குகின்றான். நாம் ஒவ்வொருவருமே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மீடியாவின் ஆளுகைக்கு உட்பட்டே உள்ளோம்.

எமது நடிபங்குகளின்வழி வானொலி, தொலைக்காட்சி, இணையம் மற்றும் அச்சு ஊடகங்களின் கருத்தியல்களினை உள்வாங்கியவர்களாக, நுகர்பவர்களாக நம்மை இனங்காட்டிக் கொள்கின்றோம்.

குறிப்பாக எமக்கான மாற்றத்தினை எமது மனப்பாங்கு, நடத்தை, பண்பாட்டின் வழி இத் தொடர்பு சாதனங்கள் ஊக்குவிக்கின்றன. மனிதனாலே படைக்கப்பட்ட மீடியா இனறு மனிதனை உருவாக்குகின்றது என்று கூறுமளவிற்கு முதன்மையான வகிபாகத்தை மனித மேம்பாட்டில் அவை தமதாக்கிக் கொண்டு செயற்படுகின்றன.

வெகுசனத் தொடர்பூடகங்கள் எப்பொழுதும் மிகக் கூர்மையாகச் சுற்றாடலினை-சூழலினைக் கண்காணிக்கும் செயற்பாட்டினை மேற்கொண்டு அரசியல் சமூகப் பொருளாதார பண்பாட்டுச் சூழலில் நிகழும் நிகழ்வுகளினை, சிக்கல்களினை, வரப் போகும் ஆபத்துக்களினை உடனுக்குடன் அறியத்தரும் பணியிலீடுபட்டுக் கொண்டிருக்கின்றன.

இதன் வழிதான் பொருளாதார வளர்ச்சிகள், நெருக்கடிகள், அரசியல் நகர்வுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய எச்சரிக்கைகளினை எதிர்வுகூறுவதில் முதன்மையான செயற்பாட்டினை மேற்கொள்கின்றன.

மேலும் பங்குச் சந்தை மற்றும் பரிமாற்றம் பணவீக்கம், நாணயமாற்று விகிதம் போன்றவற்றினை நாளாந்தம் செய்திகளாக , தகவல்களாக மக்களுக்குத் தருகின்ற கருவிகளாக விளங்குகின்றன.

அதுமட்டுமன்றி நாளாந்தம் எந்த தியேட்டரில் என்ன திரைப்படம் திரையிடப்படுகின்றது, புதிய சந்தை உற்பத்தி வரவுகள், அவற்றின் விலை, தர நிர்ணயம், புதிய நாகரிக முயற்சிகள், எரிபொருட்களின் சர்வதேச சந்தை விலைகள் போன்றவற்றினை இவ் வெகுசனத் தொடர்பூடகங்கள் மூலமாக நாம் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடிகின்றது.

இதேநேரத்தில் வல்லரசு நாடுகள் தமது அரசியல் நகர்வுகள், தேசிய பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளைப் பாதிக்கும் விதத்தில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் செய்திகளினைப் பொறுப்பற்ற விதத்தில் பரப்புவதாக சர்ச்சைகளினைக் கிளப்பி வருகின்றமையையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

பொதுவாகவே உலகில் தொலைக் காட்சிக்கு அடிமையானோரின் தொகைதான் உயர்வாகவுள்ளது. இதில் காண்பிக்கப்படும் நிகழ்ச்சிகள் கண்ணுக்கும் செவிக்கும் ஒரே நேரத்தில் விருந்தளிப்பவை.

அதனால் இதன்பால் இயல்பாகவே மக்கள் ஈர்க்கப்படுந் தன்மை உயர்வாகவுள்ளது. இணையத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் ஒப்பீட்டளவில் கூடுதலான வதந்திகளும் யதார்த்தத்திற்கு ஒவ்வாத கட்டுக்கதைகளும் பரப்பப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன.

இவை மக்களிடையே தேவையற்ற அச்சத்தினையும் பதற்றத்தினையும் ஏற்படுத்தி விடுவதாக அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர். மிலேனிய ஆண்டில் (2000) சகல கணனிகளும் தமது செயற்பாட்டினை நிறுத்திவிடுமெனவும் உலகிற்கே அச்சுறுத்தலாகவுள்ள பன்றிக் காய்ச்சலுக்கு மருத்துவரீதியில் எவ்விதமான நிவாரணிகளுமில்லையென்ற பரப்புரைகளும் 2012 இல் உலகம் அழிந்துவிடுமென்ற கருத்தினை மெய்ப்பிக்கும் விதத்தில் தயாரிக்கப்படுகின்ற திரைப்படங்களும் மக்களை அச்சங்கொள்ள வைத்தமையை-வைக்கின்றமையை நாம் மறந்துவிட முடியாது.

அதேநேரம் வெகுசனத் தொடர்பூடகங்களின் அசுரத்தனமான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் சடுதியான மாற்றங்களின் பால் மக்களைத் திரும்பிப் பார்க்க வைத்து விடுகின்றன.

இந்த நூற்றாண்டில் தொலைக்காட்சி வலையமைப்பு மற்றும் இணையத் தளங்களின் அபரிமிதமான வளர்ச்சி பன்னாட்டுச் செய்தி நிறுவனங்களுக்கும் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

நாடுகளின் எந்தத் திசையில் நடக்கும் செய்திகளினையும் கணப்பொழுதில் உலகின் மூலைமுடுக்கெங்கும் கொண்டு போய்ச் சேர்க்கும் வல்லமையைத் தம்மகத்தே கொண்டு அவை செயற்படுகின்றன. வளைகுடாயுத்தம், உலக வர்த்தக மையத்தின் மீதான பயங்கரவாதத்தாக்குதல், மும்பைத் தாக்குதல், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் மரணம், டயானாவின் விபத்து மரணம் போன்ற நிகழ்வுகள் கணப்பொழுதில் உலகம்பூராகவும் இவ் ஊடகங்களினால் மக்களின் கண்களுக்கும் செவிகளுக்கும் வழங்கப்பட்டுவிட்டன. இவ்வாறே சிறைச்சாலைகளில் இடம்பெறுகின்ற சித்திர வதைகள், இலங்கையில் இடம்பெற்ற மனிதப்படுகொலைகள் போன்றனவும் இந்த ஊடகங்களின் மூலமாகவே வெளிக்கொணரப்பட்டு சர்வதேச அரங்கிலே பெரும் பரபரப்பினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இத்தகைய பயங்கரவாதச் செயற்பாடுகளினை தொடர்பூடகங்களின் மூலம் மீண்டும் மீண்டும் காட்சிப்படுத்தும் போது அவை இளையோரையும் குற்றங்கள் புரிவதற்கும், வன்முறைக ளின் பால் ஈர்க்கப்படுவதற்கும் தூண்டிகளாக அமைகின்றன. மேலைத்தேய நாடுகளில் பாடசாலை செல்லும் சிறுவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற குற்றச் செயல்களினை இங்கு ஒப்பிட்டு நோக்க முடியும்.

குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களினைச் சந்ததிக்குச் சந்ததி பரிமாற்றஞ் செய்வதிலும் இந்த ஊடகங்களின் தேவை இன்றியமையாததாயுள்ளது. குறிப்பாக புலம்பெயர்ந்த உறவுகளின் எதிர்காலச் சந்ததியில் இப்பரிமாற்றம் குறிப்பிட்டளவு தாக்கம்-மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்படும் சரித்திர இலக்கியங்களினைத் தழுவித் தயாரிக்கப்பட்ட வரலாற்றுப்படங்கள் தமது இனத்தின் தோற்றம், பண்பாடு சமயம் மொழி கலைகள் மற்றும் சமூகப் பொருளாதார வாழ்வியற் கோலங்களினை கற்றுக்கொடுக்கின்றன.

தற்போது 'மக்களுக்கான அறிவூட்டல்' என்ற குறிக்கோளின் அடிப்படையில் நடத்தப்படுகின்ற அறிவுசார் நிகழ்ச்சிகள் மீடியாவிலே குறிப்பிட்டதொரு பங்கினை வகித்து வருகின்றன.

குறிப்பாக, மாணவர்களுக்கான கல்விசார் கலந்துரையாடல்கள், பாடங்கள் மற்றும் பரீட்சை தொடர்பான வழிகாட்டல்களும் விளக்கங்களும் உயர்கல்வி தொடர்பான வழிகாட்டல்களும் இத்தகையதே.

தொழில் புரிவோருக்கான வழிகாட்டல் ஆலோசனைகள், விளம்பரங்கள், அறிவியல் விளக்கங்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்கள் பொதுமக்களின் நன்மை கருதியும் இடம் பெற்று வருகின்றன.

கார்ள் மாக்சின் (Carl Marx) வார்த்தையினூடு கூறுவதாயின், ஒருபகுதியினருக்கு மட்டுமே உரித்தானவை யென்றும், ஏனைய நலிவுற்ற பகுதியினரால் அடைந்து கொள்ள முடியாதவை என்று கருதப்பட்ட, துருவப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள், வசதிகள், அனுகூலங்கள் எல்லாம் இன்று ஊடகங்களின் ஆதிக்கத்தினால் சிதறடிக்கப்பட்டு உலகின் எந்த நாட்டின் மூலையில் இருப்பவராலும் அவற்றினை நுகரக் கூடியதாக இருப்பதனை நடைமுறையில் காணமுடிகின்றது.

குறிப்பாக அதிகார மையங்களினை உடையச் செய்வதில் இவற்றின் பங்கு அளப்பரியதே. இவை தொடர்பான மாற்றுக் கருத்துக்களினை முன்வைப்போரும் உள்ளனர்.

அதேநேரம் மீடியாவின் மூலம் முன்வைக்கப்படாத எதுவும் மக்களின் முன்னிலையில் எடுபடாத – கவனத்தினையீர்க்காத நிலைமையே காணப்படுகின்றது என்று கூறுமளவிற்கு அவற்றின் ஆர்வம் விளம்பரங்கள், தகவற் பரிமாற்றுகை, விமர்சனங்களில் தங்கியுள்ளதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

பிள்ளைகளின் சமூகமயமாக்கலுக்கு (Socialization) உதவுவதிலும் செயற் பாடுகளினை ஊடகங்கள் முன்னெடுக்கின்றன. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கை முறைமைகளினைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன.

சகபாடிகளின் மீது செல்வாக்கினை ஏற்படுத்துகின்றன. விழுமியங்கள், நியமங்கள், வழக்காறுகளினைக் கடத்துகை செய்கின்றன. (தொடரும்)

எஸ்.ஹரிகரதாமோதரன்
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 112

இயற்கையாக இதயத்தில் காணப்படும் இதயமுடுக்கி (Pacemaker) என்ன?

புதிர் 112 இற்கான விடைகளை 07.07.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 111 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செல்வி சுவர்ணலதா கங்காதரன்
திரு இதயக் கல்லூரி,கரவெட்டி.

**புதிர் 111 க்கான கேள்வியும் விடையும்:**

பூமியின் ஓட்டில் அதிகம் காணப்படும் மூலகம் (ELEMENT) எது?

ஒட்சிசன்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 112

சரியான விடை:-..........................................................................

முழுப்பெயர்:-..........................................................................


முகவரி:-..........................................................................

தொ.பே. இல:..........................................................................

கையொப்பம்:..........................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



81

எந்தப் படைப்பாளியையும் அவன் வாழும் காலத்திலிருந்து ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட படைப்பாளிகளே பாதிக்கிறார்கள்.

பாரதியை பாதித்தவர்கள் இராமலிங்க சுவாமிகள், கோபாலகிருஷ்ண பாரதி, மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை.

பாரதிதாசனை பாதித்தவர் பாரதி.

கண்ணதாசனை பாதித்தவர் பாரதிதாசன்.

என் காற்சட்டை நாட்களில் என்னை பாதித்தவர் இருவர்.

ஒருவர் கலைஞர்;

அவர்தான் தமிழை எனக்கு அறிமுகம் செய்தவர்.

இன்னொருவர் கவியரசு கண்ணதாசன்;

அவர்தான் தமிழ்க் கவிதைகளை எனக்கு அறிமுகம் செய்தவர்.

இந்த சமூகத்தை அவர் பெரிதும் பாடலாசிரியராகவே பாதித்திருக்கிறார்.

ஆனால் என்னை அவர் ஒரு கவிஞனாகத்தான் பாதித்திருக்கிறார்.

ஒரு கவிதையில் சொல் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் ஒரு மனிதன் வாழ்க்கையில் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கும் அவரே எனக்கு வழிகாட்டி.

அவரில்லையென்றால் விருத்தத்தோடு எனக்குப் பொருத்தம் வந்திருக்காது.

அவரில்லையென்றால் என் கவிதைக்கு இந்த ஓட்டம் (Flow) கிடைத்திருக்க முடியாது.

அவரில்லையென்றால் இந்தக் கிராமத்துக் கலப்பை வானத்தை உழுது பார்க்க வசதியிருந்திருக்காது.

அவரில்லையென்றால் இந்த விறகு வேர் விட்டிருக்க முடியாது.




கவிதையின் அம்சங்கள் இரண்டு:

எதைச் சொல்வது என்பது ஒன்று;

எப்படிச் சொல்வது என்பது இரண்டு.

எதைச் சொல்வது என்பதில் அவரோடு எனக்கு முரண்பாடுகள் உண்டு.

ஆனால் எப்படிச் சொல்வது என்பதில் இம்மியின் குழந்தை அளவும் அவரோடு எனக்கு முரண்பாடு இல்லை.

ஒரு கவியரங்கத்தில் அழுகை என்ற தலைப்பில் அவர் கவிதை பாடுகிறார்.

நானும் ஆயிரக்கணக்கான அறுசீர் விருத்தங்களை என் அடி மனசில் போட்டு அரைத்துச் சலித்து மென்று துப்பியிருக்கிறேன்.

ஆனால் அந்த அழுகை என்ற அறுசீர் விருத்தத்திற்கு இணையான விருத்தம் என்னைப் பொறுத்த வரையில் தமிழில் இல்லவே இல்லை.

அதைவிட வளமான கவிதைகள் இருக்கலாம்; ஆனால் அதைப் போன்ற அழகான கவிதை இல்லை.

அந்தக் கவிதையை பிரபஞ்சத்தை நோக்கி ஒரு பிரகடனம் மாதிரி முடிக்கிறான் கவிஞன்.

"இன்று நான் அழுதேன்; ஊமை
ஏக்கத்தால் அழுதேன்; ஏழைக்
கன்று போல் அழுதேன்; ஆனால்
கவிதையில் அழுதேன்; இந்த
மன்றத்தில் அழுத என்னை
மறுபடி அழவைக் காமல்
சென்றுவா தமிழே! நாளை
திரும்பவும் சந்திக் கின்றேன்."

தமிழைப் பார்த்து இன்று போய் நாளை வா என்று சொல்லும் கம்பீரம் கண்டு என் தோள்களிரண்டும் ஒவ்வோர் அங்குலம் உடனே வளர்ந்தன.

கலைஞர் தலைமையில் கவிபாட வந்த ஒரு கவியரங்கத்தில்-

"எனக்கும் திருமணத்தை
இவர்தான் நடத்திவைத்தார்
ஈரேழு பிள்ளை;
இன்னும் முடியவில்லை."

என்று ஒரு வெடியை சபையில் வீசினார். அன்று அந்த மண்டபத்தில் நானுமிருந்தேன். சபையில் எழுந்த ஆரவாரத்தில் ராஜாஜி ஹோலின் சர விளக்குகளும் சற்றே அசைந்தன.

(தொடரும்)

-வைரமுத்து-

# தமிழக மீனவர்களின் அத்துமீறல் வடக்கு மீனவர்களை பாதிக்கிறது

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மீனவர்களின் மீன் வளத்தையே இந்திய மீனவர்கள் சுரண்டுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குரல் கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழக மீனவர்கள் வடக்கு மீனவர்களின் மீன்வளத்தை சூறையாடுவதற்கு எதிராக குரல் கொடுப்பதில்லை.

வடக்கு கடலில் அதிகளவில் இலங்கைத் தமிழ் மீனவர்களே மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக மீனவர்களின் அத்துமீறல்களினால் வடக்கு மீனவர்களே பாதிக்கப்படுகின்றனர்.

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் மீன்களை பிடிக்கும் தமிழக மீனவர்கள் சர்வதேச ஊடகங்களின் வழியாக இலங்கை கடற்படையினருக்கு எதிராக குற்றச்சாட்டை சுமத்துகின்றனர் என தெரிவித்துள்ளார். (அ)

## ஆயிரத்து 377 வெளிநாட்டு பிரஜைகள் நாடு கடத்தப்பட்டனர்

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த ஆயிரத்து 377 வெளிநாட்டு பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். குடிவரவு குடியகல்வு திணைக்களம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

பங்களாதேஸ், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நைஜீரியா, இந்தியா, ரஷ்யா, நேபாளம், கொரியா, இஸ்ரேல்மற்றும்ஈரான்ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்ட விரோதிகள் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இந்தியர்களே அதிகளவில் சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய நாட்களில் 700 இற்கும் மேற்பட்ட இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஜோதிடர்கள், நோய்களைக் குணப்படுத்துவோர் என பல்வேறு வழிகளில் இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்து பணம் சம்பாதித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# போர் விமான கொள்வனவு குறித்து அரசு ஆராய்வு

இலங்கை விமானப்படையில் உள்ள கிபிர் மற்றும் மிக் ரக போர் விமானங்கள் நீண்டகாலம் பயன்படுத்தப்பட்டு விட்டதால், அவற்றை நீக்கிவிட்டுப் புதிய போர் விமானங்களை கொள்வனவு செய்வது குறித்து இலங்கை விமானப்படை ஆராய்ந்து வருகிறது.

விமானப்படையில் உள்ள கிபிர் மற்றும் மிக் 27 போர் விமானங்கள் இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.


இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இந்தப் போர் விமானங்கள் நீண்டகாலம் பயன்படுத்தப்பட்டுள்ளதால், இவ்விமானங்களின் தரத்தை பரிசோதிக்கும் நடவடிக்கையை விமானப்படை ஆரம்பித்துள்ளது.


இந்த விமானங்களை இன்னும சில ஆண்டுகளுக்குள் பாவனையில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்பதால், புதிய ஜெட் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடுகளை விமானப்படை மேற்கொண்டு வருகிறது.

அத்துடன், புதிய ஜெட் போர் விமானங்களுடன், ரேடர் வழிகாட்டல் ஏவுகணைத் தொகுதிகளை கொள்வனவு செய்வதிலும் இலங்கை விமானப்படை கரிசனை கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையிடம் தற்போதுள்ள ஜெட் போர் விமானங்கள் கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தில் இருந்து ஆயிரக்கணக்கான தாக்குதல் பறப்புகளை மேற்கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)







ஞானாசிரியர் கல்லூரியின் இவ்வாண்டுக்கான கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கணிதபாட ஆசிரிய ஆலோசகர் ச.கோபினாத் மங்கல விளக்கேற்றுவதையும் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பைத் தொடர்ந்து மத அழிப்பு...!

ரஸ்மின்



...அளுத்கம நகரம் ஒரு பக்கம் ஆற்றையும், இதர மூன்று பக்கங்கள் சிங்கள கிராமங்களாலும் சூழப்பட்ட ஒரு ஊர். முழுக்க முழுக்க சிங்களவர்களின் தாக்குதலால் முஸ்லிம்களின் பல கோடிக் கணக்கான ரூபாய்களும் சொத்துக்களும் சூறையாடப்பட்டன.

இந்தக் கலவரத்தைத் தூண்டிவிட்டது பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞான சார தேரர் என்பவர். எந்த முஸ்லிமாவது ஒரு சிங்களன் மீது





கையை வைத்தாலும் அதுவே அவர்களது இறுதி முடிவுக்கு அடையாளம் எனப் பேசி பெரும்பான்மை மக்களின் மனதில் முஸ்லிம்கள் குறித்த வெறுப்பு உணர்வை அதிகப்படுத்தி வருகிறார். இவர் பேசிய பேச்சால் தான், முஸ்லிம்களைப் பழி வாங்க வேண்டும் என்ற உணர்வு அதிகரித்து, இதுவே மிகப்பெரும் கலவரம் நடக்கவும் காரணமாகிவிட்டது. பல கடைகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. பெரும்பாலான வீடுகள் தாக்கப்பட்டு கொளுத்தப்பட்டு இருக்கின்றன. பல பள்ளிவாசல்கள் இந்த மதவெறியர்களால் எரிக்கப் பட்டுள்ளன.

சம்பந்தமே இல்லாத மூன்று அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று இருக்கிறார்கள். பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி, ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆர்ப்பாட்டம் மட்டும் நடத்த வந்திருந்தால், பள்ளிகளையும் வீடுகளையும் கடைவீதிகளையும் தாக்கி அழிக்கும் அளவுக்கு ஆயுதங்களுடன் வந்திருக்க சாத்தியமே இல்லை.

எங்களைத் தாக்க வேண்டும்; எங்கள் உடைமைகளை அழிக்க வேண்டும் என்று நன்கு திட்டமிட்டே சதித்திட்டம் தீட்டி இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. பல முஸ்லிம்கள் இப்போது பள்ளிவாசலில்தான் வசித்து வருகிறார்கள். முஸ்லிம்கள் அச்சத்துடனும் இருக்கிறார்கள். எங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது.

இந்தக் கலவர சூழ்நிலையைப் பார்வையிடுவதற்காக சம்பவ இடத்துக்கு வந்த நிதி அமைச்சர் ரவுப் ஹகீம் போன்றவர்களை நுழைய விடவில்லை. யாரையுமே ஊருக்குள் அனுமதிக்க மறுத்து வருகிறார்கள். இங்கு இருக்கும் பதற்றமான நிலையை அறிய பத்திரிகையாளர்களையும் கூட அனுமதிப்பது இல்லை. காவற்றுறையின் கண்ணெதிரில்தான் இவ்வளவு அட்டூழியங்களும் நடந்து இருக்கின்றன. பலரும் வீட்டிலேயே முடிங்கிக் கிடக்கிறார்கள்.

நாங்கள் இப்போது அரசிடம் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். கலவரத்திற்கு ... கலவரங்களுக்குக் காரணமான பொது பல சேனா இயக்கத்தை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும். கேள்விக் குறியாகி இருக்கும் இலங்கை முஸ்லிம்களின் பாதுகாப்பை அரசு உடனடியாக உறுதி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அவசர உதவிகளை உடனடியாகச் செய்ய வேண்டும். அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும்.

சொத்துக்களை இழந்தவர்களுக்கு அரசு உடனடி நிவாரணம் வழங்க வேண்டும். முக்கியமாக உண்ண உணவின்றித் தவிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உணவுகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.





கலவரக் காட்சிகள்...

கலவரத்தில் ஈடுபட்ட ஒருவர்கூட இது வரை கைது செய்யப்படவில்லை. இலங்கையில் இனி முஸ்லிம்கள் வாழ்வதே கேள்விக்குறியாகி இருக்கிறது என்று வேதனையுடன் சொல்லி முடித்தார்.

இதுகுறித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமா - அத்தின் மாநிலத் தலைவர் பி.ஜைனுல் ஆபிதீனிடம் கேட் டோம். இலங்கையில் முஸ்லிம்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். அங்கு இருக்கும் மக்களுக்கு ஒன்று என்றால், நாங்கள் சும்மா இருக்க மாட்டோம். இந்தச் சம்பவத்தை அரங்கேற்றிய பொதுபலசேனா அமைப்பினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க, இலங்கை அரசை வலியுறுத்த சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள இலங்கை தூதரகத்தை 17 ஆம் திகதி முற்றுகைப் போராட்டம் நடத்தி இருக்கிறோம். இந்தக் கலவரத்தை பொதுபல சேனா அமைப்பும் அதன் பொதுச் செயலாளர் ஞான சார தேரரேயும்தான் முன் நின்று நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது கடும் நடவடிக்கை தேவை.

இந்தத் தாக்குதலுக்கு இலங்கை அரசு உடந்தையா? புத்த பிக்குகள் வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசியபோதும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே ஏன்? புத்த பிக்குகளை முஸ்லிம்கள்தான் தாக்கினார்கள் என்பதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை. அப்படியே இருந்தாலும் சம்பந் தப்பட்ட வரை த்தான் கைது செய்திருக்க வேண் டுமே தவிர, ஒரு இனத்தையே எப்படித் தாக்கலாம். அவர்கள் உடைமைகளை சூறையாடி, மசூதியைக்கூட கொளுத்தியிருக்கிறார்கள். ஜனநா யக வழி யில் ஆர்ப்பாட்டம் என்றவர்களிடம் ஆயுதம் வந்தது எப்படி.

பலஸ்த்பாது காப்புக்கு மத்தியில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும்போது, கலவரக் காரர்கள் மட்டும் சுதந்திரமாக நடமாடியது எப்படி? உயிர்ச் சேதங்கள், பொருட்சேதங்கள் ஏற்பட்ட போதும் அதிகார வர்க்கம் கைகட்டி நின்றது ஏன்? முஸ்லிம்களின் இது போன்ற ஏராளமான சந்தேகங்களுக்கு இலங்கை அரசு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். அதுவரையில் எங்களுடைய போராட்டம் தொடரும் என்றார். யாருக்கும் நிம்மதி இல்லாத நாடாக இலங்கை மாறிக் கொண்டு இருக்கிறது என்பதற்கு உதாரணம் இது.

(முற்றும்)

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தாதது ஏன்? பொதுபல சேனா

இலங்கையில் கடந்த பல தினாங்களாக நாடு முழுவதும் முஸ்லிம் பொது மக்கள் வீதிகளை மறித்து நடத்திய ஹர்த்தால் போராட்டத்திற்கு எதிராக நாடடின் சட்டத்தை ஏன் செயற்படுத்தவில்லை என ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் கேள்வி எழுப்பியுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஒமல்பே சோபித தேரரின் கையெழுத்துடன் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பௌத்த மக்கள் அமைதியான கூட்டங்கள் மற்றும் போராட்டங்களை நடத்தும் போது தடை செய்து நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த சட்டம் ஏன் முஸ்லிம்களுக்கு அமுல்படுத்தப்படுவதில்லை? அவர்களுக்கு நாட்டில் தனியான சட்டம் அமுலில் இருந்து வருகிறதா?

அளுத்கம சம்பவத்தின் பின்னர், பௌத்த மக்களும் பௌத்த அமைப்புகளும் மாவனல்லை, ருவான்வெல்ல, பதுளை, மஹியங்கனை ஆகிய பிரதேசங்களில் நடத்தவிருந்த பௌத்த கூட்டங்கள் தடை செய்யப்பட்டன.

நாட்டில் அமைதி, மத சக வாழ்வு என்பவற்றை தற்காத்து கொள்ளும் தேவையின் நிமிர்த்தம் இந்த கூட்டங்கள் தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த அமைதியான நிலைமையை தற்காத்து கொள்வதற்காக முஸ்லிம் அமைப்புகள் அடிப்படைவாத குழுக்களுக்கு எதிராக ஏன் சட்டத்தை அமுல்படுத்துவதில்லை. நாட்டின் சட்டத்திற்கு மேல் ஷரியா சட்டம் அமுலில் இருப்பது இதற்கு காரணமா?


எவரை மகிழ்விப்பதற்காக பௌத்தர்களை அச்சுறுத்தி, அவர்களை ஆக்கிரமித்து முஸ்லிம் அடிப்படைவாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது? முஸ்லிம்கள் ஹர்த்தாலில் ஈடுபடும் போது பௌத்தர்களை தேடி வேட்டைக்கு போகும் பொலிஸார் நாட்டுக்கு கிடைத்துள்ளனர்.

உலகம் முழுவதும் சிங்கள பௌத்தர்கள் மற்றும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக சர்வதேச ஊடகங்களை பயன்படுத்தி முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பொய்களை பரப்பி வரும் நிலையில், சிங்கள பௌத்தர்களின் குரல்களுக்கு இலத்திரனியல், அச்சூடகங்களில் உத்தியோகபூர்வமற்ற தடை விதிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது.

நாட்டின் பெரும்பான்மை பௌத்த மக்களுக்கு இவ்வாறான துயரமான நிலைமை ஜனாதிபதியின் ஆடசியின் கீழ் எதிர்நோக்க நேர்ந்துள்ளமை பெரும் மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் சோபித தேரர் தனது கடிதத்தில் கூறியுள்ளார். (அ-2)

# சட்ட விதிமுறைகளுக்கு அமைய மிருகபலி யாகங்கள் நடக்க வேண்டும்

## தலைமை நீதியரசர் தெரிவிப்பு



இந்து ஆலயங்களில் செய்யப்படுகின்ற மிருக பலி யாகத்தை முழுமையாக தடை செய்ய முடியாது என்று இலங்கையின் தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார்.

அதேவேளை, இப்படியான மிருகபலி யாகங்கள், நாட்டின் பொதுச் சட்ட விதி முறைகளுக்கு அமைய நடக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மிருகபலி தொடர்பாக பிக்குமாரின் தேசிய சங்க சம்மேளனம் தாக்கல் செய்த வழக்கு ஒன்றை விசாரித்த இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம், சிலாபத்தில் உள்ள முனீஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலய மிருகபலி பூசைக்கு அண்மையில் தடை விதித்திருந்தது.

அந்தத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி பத்திரகாளி அம்மன் ஆலயத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை விசாரித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்து ள்ளார்.

மிருகங்களை கொல்வதற்கான அனுமதிப் பத்திரமொன்றை பெற்ற பின்னர், அப்படியான மிருகபலி யாகத்தை நடத்துவதற்கு அந்த ஆலயத்துக்கு எந்தவிதமான தடையும் கிடையாது.

ஆனால், அதனை ஏற்க மறுத்த காளிகோயில் நிர்வாகத்தின் சார்பிலான சட்டத்தரணி, சுமார் 100 வருடங்களுக்கும் அதிகமான காலமாக இந்த யாகத்தை நடத்தி வரும் ஆலயத்துக்கு அதனை தொடர்ந்து நடத்த இந்த அனுமதிப் பத்திரம் தேவையில்லை என்று வாதிட்டார்.

பொதுச் சட்டம் மீறப்படக் கூடாது என்று பதிலளித்த தலைமை நீதிபதி, சட்ட விதிமுறைகளை மீறாத வகையில், சம்பந்தப்பட்ட கோயில் நிர்வாகத்தினால், தன்னிச்சையாக உருவாக்கப்பட்ட ஒரு விதி முறைக்கு அமைய, இந்த யாகத்தை நடத்த அனுமதி வ்ழங்க முடியும் என்றும் கூறினார்.

அவ்வாறான ஒரு விதிமுறையை தயாரிப்பதற்கான உதவிகளை நீதிமன்றம் வழங்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, மிருக வதையை தடுக்கும் சட்டம் ஒன்றை கொண்டு வருமாறு தாம் நாடாளுமன்றத்தை கோரப்போவதாக தேசிய சங்க சம்மேளனம் கூறியுள்ளது. (அ-2)

# விஜித தேரரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

ஜாதிகபல சேனா அமைப்பின் தலைவர் வட்டரக்க விஜித தேரர், புத்தசாசனத்திற்கு அவமரியாதை ஏற்படும் வகையில் போலியான நடிப்பில் ஈடுபட்டதால் அவரை பௌத்த சாசனத்தில் இருந்து வெளியேற்ற மாநாயக்க தேரர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறியுள்ளார்.

வட்டரக்க விஜித தேரர், அவருக்கு பின்னால் இருந்து அவரை வழி நடத்தி வரும் நபர்கள் மீது பொதுபல சேனா அமைப்பு தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்தி தமது அமைப்புக்கும் தனக்கும் ஏற்படுத்திய அவமதிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

வட்டரக்க விஜித தேரர், மஹியங்கனை பிரதேச சங்க சபையினால் சங்க கட்டளை விதிக்கப்பட்டு, பிராக்ம தண்டனை விதிக்கப்பட்டவர் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தங்கத்தூள் கடத்திய இளைஞன் கைதானர்

இலங்கையில் இருந்து தேயிலைத் தூளில் தங்கத்தை கலந்து கடத்தி வந்த இலங்கை இளைஞர் ஒருவரை சென்னை விமான நிலையத்தில் சுங்க திணைக்கள அதிகாரிகள் கைது செய்தனர்.

சென்னை, மீனம்பாக்கம் அண்ணா சர்வதேச விமான நிலையத்திற்கு இலங்கையில் இருந்து விமானம் வந்தது. இதில் வந்த பயணிகளை சுங்க திணைக்கள அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அங்கு தேயிலைத்தூள் இருந்தது. அதை பிரித்து பார்த்த போது அதில் தங்கத்தை பொடியாக்கி அதில் கலந்து கடத்திக்கொண்டு வந்தது தெரியவந்தது.

தேயிலைத்தூளில் இருந்து 15 இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்கத்தை கைப்பற்றினார்க்ள். (அ)

# இலங்கை கடற்படைக்கு கண்காணிப்புப் படகு

## அன்பளிப்பு செய்தது ஆஸி.

(கொழும்பு)

இலங்கை கடற்படைக்கு புதிய கரையோரக் கண்காணிப்புப் படகு ஒன்றை அவுஸ்திரேலிய அரசாங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகுகள் மூலம் பயணம் செய்து அவுஸ்திரேலியா செல்லும் குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு உதவும் வகையிலேயே இந்தப் பட்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதமும் இது போன்ற படகு ஒன்றை அவுஸ்திரேலிய அரசாங்கம் அன்பளிப்புச் செய்திருந்தது.

அதன் பின்னர் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் படகுப்ப்பயணங்கள் பெருமளவு குறைந்துள்ள நிலையில் இந்த இரண்டாவது படகு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் உள்ளடக்கிய இந்தப் படகு இன்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பேராசை

அள்ள அள்ளக் குறையாதது அட்சய பாத்திரம். அது நமக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால், போடப்போட நிரம்பாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா?

எம்மில் பலபேரிடம் அந்தப் பாத்திரம் உண்டு. அது தான் 'பேராசை' என்ற பாத்திரம். அதை நிறைவு செய்யவே முடியாது.

போரசை பற்றி சூஃபி இலக்கியத்திலே ஒரு பிரபலமான கதை இருக்கிறது. அதை சுவாமி சுகபோ தானந்தா எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஒரு மன்னர் நகர்வலம் வந்து கொண்டிருந்தார்.

அவ்வேளையில் ஒரு பிச்சைக்காரன் மன்னர் எதிரிலே வந்தான்.

"ஐயா! பிச்சை கொடுங்கள்" என்றான்.

என்னுடைய அமைதியைக் ்கெடுக்காதே... போ! என்றார் மன்னன்.

அவன் சிரித்தான்.

"அரசே உங்களின் அமைதி கெடக்சுவடிய நிலையிலே இருந்தால், அதற்குப் பெயர் அமைதியே கிடையாது" என்றான்.

தனக்கு எதிரிலே நிற்பது வெறும் பிச்சைக்காரன் இல்லை... யோகி! என்பதை மன்னர் புரிந்து கொண்டார்.

"துறவியே! உங்களுக்கு என்னவேண்டுமென்றாலும் கொடுக்கிறேன்!" என்றார்

அத்துறவி மறுபடியும் சிரித்தார்.

"அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்" என்றார்.

மன்னருக்கு கோபம் வந்து விட்டது. என்ன இவர் இப்படி சொல்கிறார் என்று நினைத்தார்.

நகர்வலம் வருவதைப் பாதியிலே நிறுத்தினார்.

"வாருங்கள் அரண்மனைக்கு!" என்றார். துறவியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு சென்றார்.

துறவி தன்னிடமிருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார். "இது நிறைய எனக்கு பொற்காசுகள் வேண்டும்" என்றார்.

"இவ்வளவு தானா?" என்று சொல்லிக் கொண்டு கையைத் தட்டினார் மன்னர். ஒரு பெரிய தாம்பாளம் நிறைய பொற்காசுகள் வந்து குவிந்தன. அதை அள்ளிப் போட்டார். போடப்பட்ட அந்தப் பிச்சைப் பாத்திரம், பொற்காசுகள் அத்தனையையும் உள்ளே வாங்கிக் கொண்டே இருக்கிறது.

மூட்டை மூட்டையாகப் பொற்காசுகள் கொட்டி முடிந்தது. அது விழுங்கிக் கொண்டே இருக்கிறது. கடைசி வரை அந்தப் பிச்சைப்பாத்திரம் நிரம்பவேயில்லை. அரசனிடம் இருந்த கர்வம் போய்விட்டது.

அப்படியே 'பொத்' என்று துறவி காலிலே விழுந்தார்.

அப்போது அந்தத்துறவி சொன்னார்; "மன்னா! இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களால் மட்டுமல்ல... வேறு யாரையும் நிரப்ப முடியாது. அதற்கு என்ன காரணம் என்றால்... இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல...

"பேராசையுடன் வாழ்ந்து இறந்து போன ஒரு மனிதனின் மண்டையோடு இது!" என்றார்.

இறந்த பின்னரும் நிறைவு இல்லையென்றால், அது எப்படிப்பட்ட பேராசையாக இருக்குமென்று யோசித்துப் பாருங்கள்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வாகன விபத்து; இருவர் படுகாயம்



மோட்டார் சைக்கிளும் மகேந்திரா ரக வாகனமும் கடந்த செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளாகியது.

இவ் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (9-250)

# போலி நாணயத்தாளை வழங்கியவருக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்றை வர்த்தகரிடம் வழங்கி பொருட்களை கொள்வனவு செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் உள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

இந்த உற்சவத்தில் கலந்து கொண்ட குறித்த நபர் அங்குள்ள கடை ஒன்றில் பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வர்த்தகரிடம் கொடுத்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த ஆயிரம் ரூபா நாணயத்தாள் போலியானது என்பதை அறிந்து கொண்ட வர்த்தகர் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார்.

அங்கு வருகை தந்த பொலிஸார் குறித்த நபரிடம் விசாரணை மேற்கொண்டதுடன்அவரை கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்திருந்தனர்.

இவ்வாறாக கைது செய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் புதன் கிழமை முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

(9-250)

# விபத்தில் சிக்கிய சிறுவனின் மூளை செயலிழப்பு

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் சிக்கிய சிறுவனின் மூளை இறப்புக்குள்ளாகியுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற பேருந்தில் பயணித்த கிளிநொச்சியை சேர்ந்த எஸ்.மதுசன் என்ற ஆறு வயது சிறுவன் வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள உணவகமொன்றிற்கருகில் பேருந்து நிறுத்தப்பட்ட போது இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார்.

அவ்வேளை எதிர்த்திசையால் வந்த வாகனம் மோதியதில் படுகாயமடைந்த சிறுவன் வவுனியா பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

எனினும் சிறுவனின் மூளை இறந்துவிட்டதாக தெரிவித்த வைத்தியசாலை பணிப்பாளர் சிறுவனுக்கு தொடர்ந்தும் செயற்கை சுவாசமளித்து வருவதாக தெரிவித்தார். (9-250)

# வரட்சியால் நீரின்றி அல்லலுறும் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சியினால் நீருக்காக மக்கள் அல்லற்படுகின்றனர்.

குறிப்பாக விவேகானந்தா நகர், செல்வாநகர், அம்பாள் குளம், கோணாவில் புதியகுடியிருப்பு போன்ற பல பகுதிகளிலேயே நீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் பருவ மழை பெய்யாமையினால் கிணறுகள், குளங்கள் போன்ற நீர் நிலைகளில் எவ் வருடமுமில்லாத வகையில் நீர்வற்றியுள்ளது.

இதனால் குடிநீர் மட்டுமின்றி ஏனைய தேவைகளுக்கும் நீர் இன்மையால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல கிராமங்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றன.

அத்தோடு, சில கிராமங்களிலுள்ள பாடசாலைகளின் கிணறுகளும் வற்றியுள்ளமையால் பாடசாலை நிர்வாகத்தின் மாற்று வழிமுறைகளைக் கையாள வேண்டிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே, இப் பகுதியில் நிலவும் வரட்சியிலிருந்து மக்களை பாதுகாக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-27)

# போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கடந்த புதன் கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் 21 மற்றும் 22 வயதுடைய வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களென விசாரணை களிலிருந்து தெரியவந்துள்ளது.

வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து கைதுசெய்யப்பட்ட இவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(9-250)

# மழை வேண்டி பிரார்த்தனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சியையடுத்து மழை வேண்டி பிரார்த்தனை நாளை சனிக்கிழமை காலை முதல் மாலை வரை கணேசபுரம் சர்வ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, விசேட அபிஷேகங்களும் பூசைகளும் இடம்பெறவுள்ளதாக கமக்கார அமைப்புக்கள், விவசாயிகள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(9-254)







இரணைமடு பொதுச் சந்தை திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது- சந்தைக் கட்டடத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நாடா வெட்டி திறந்து வைப்பதையும் சந்தை வளாகத்தினுள் மரக்கன்று நாட்டப்படுவதையும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)




# பருவ கால சீட்டு வழங்கல்

(முல்லைத்தீவு)

இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலையினால் இன்று முதல் பருவகால சீட்டு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சாலை முகாமையாளர் க.சிறினிவாசன் தெரிவித்துள்ளார்.

பருவகாலச் சீட்டு வழங்கும் செயற்பாடு முல்லைத்தீவு சபையினூடாக 24 வருடங்களின் பின்னர் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி முல்லைத்தீவு சபையில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் போன்றோர் பருவ கால சீட்டினை பெற்றுக் கொள்ளலாமென அவர் மேலும் தெரிவித்தார். (9)

# ஒட்டுசுட்டான் மக்களை ஏமாற்றியே ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது

## பிரதேச செயலகம் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் உண்மைக்கு புறம்பாக நடத்தப்பட்டுள்ளதாக பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தியன் வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையெனவும் அதிகாரிகள் பக்கச் சார்பாக செயற்படுவதாகவும் தெரிவித்து சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தையடுத்து பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாங்குளம், பனிக்கன்குளம், ஒலுமடு, கற்சிலைமடு போன்ற இடங்களிலிருந்து அப்பாவி பொது மக்களை வீட்டுத்திட்டம் பெற்றுத் தருவதாக ஏமாற்றி ஒன்றுதிரட்டி ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளருக்கு எதிராக இவ் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கும் உண்மை நிலைப்பாடு யாதெனில் இம்முறை இந்திய வீட்டுத்திட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளுக்கு போதுமானதாக இல்லாதிருந்த காரணத்தினாலும் கடந்த வீட்டுத் திட்டத்தில் இப் பிரதேசத்தில் பொருத்தமான பயனாளிகள் தெரிவு செய்யப்படாத காரணத்தினால் கிட்டத்தட்ட 40 வீடுகள் வரையில் உரியவர்கள் குடியிருக்காமல் பூட்டப்பட்டும் வாடகைக்கு கொடுக்கப்பட்ட நிலையிலும் இருக்கின்றது.

இதன் காரணமாக இம்முறை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று உரிய பயனாளிகளின் விபரங்களை விசாரித்து மிகப் பொருத்தமான பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்திற்கு முன்னுரிமையின் அடிப்படையில் சிபாரிசு செய்திருந்தார்.

அத்துடன் வீட்டுத் திட்டத்தினை பெற்றுக் கொள்ள பொருத்தமான அதேவேளை சிறிய குடும்பத்தையுடைய பயனாளிகளுக்கு அடுத்த கட்டத்தில் வீட்டுத் திட்டத்தினை வழங்குவதாகவும் உறுதி வழங்கியிருந்தார்.

இந் நடவடிக்கையின் போது வெளி மாவட்டத்தில் நிரந்தரமாக குடியிருப்போர், இரட்டைப் பதிவுகளை வைத்திருப்போர், ஏற்கனவே வீடு இருக்கின்றவர்கள் போன்றோர் இனங்காணப்பட்டு வீட்டுத் திட்டத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டும் உள்ளனர்.

இன்றைய ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் தகுந்த காரணிகளின் அடிப்படையில் வீட்டுத் திட்டத்திலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்களையும் அடுத்த கட்ட வீட்டுத் திட்டத்தை பெற்றுக் கொள்ள சிபாரிசு செய்யப்பட்டவர்களையும் மேற்குறிப்பிட்ட கிராமங்களிலுள்ள சில சமூக விரோத சக்திகள், உங்கள் அனைவருக்கும் வீட்டுத்திட்டம் பெற்றுத் தருகிறோம். ஆர்ப்பாட்டத்திற்கு வாருங்கள் என்று தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டத்திற்கு அழைத்துள்ளனர்.

அத்துடன் இலவச பேருந்து சேவைகளையும் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் அபிவிருத்தியை பற்றியே பெர்னாண்டிஸ் கலந்துரையாடினார்

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி செயலாளர் ஒஸ்கார் பெர்ணாண்டிஸ் யுத்தத்துக்கு பின்னரான அபிவிருத்தியை கடந்து வேறு எந்த விடயத்தையும் இலங்கையில் கலந்துரையாடவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் ஸ்டீவன் டுஜாரிக் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற பௌத்த அடிப்படைவாதிகளின் வன்முறைகள் மற்றும் ஊடக கட்டுப்பாடுகள் தொடர்பில் அவர் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினாரா? என்று இன்னர் சிட்டி பிரஸ் அவரிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்கு பதில் வழங்கிய பேச்சாளர், யுத்தத்துக்கு பின்னராக அபிவிருத்தியை கடந்து வேறு எதனையும் பேசவில்லை என்று கூறியுள்ளார்.

இதேவேளை இன்னர்சிட்டி பிரஸ் முஸ்லிம்களுக்கு எதிராக இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் பல நாட்களாக கேள்வி எழுப்பி வருகின்ற போதும், ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் அது குறித்து எந்த பதிலையும் வழங்காதிருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (அ)



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராகப் பதவிப் பிரமாணம் பெறவிருக்கும் இலங்கை வங்கியின் மானிப்பாய் முகாமையாளர் லயன் பொ.பால குமார் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினூடாக குளிர்சாதனப் பெட்டி ஒன்றை அண்மையில் வைத்திய அத்தியட்சகர் மு.உமாசங்கரிடம் கையளித்தபோது... (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# ராஜா கனகராஜாவின் கோரிக்கையை அரசு நிராகரிப்பு

வட மாகாண ஆளுநர் பதவியை வழங்குமாறு ராஜா கனகராஜாவினால் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

யாழ்ப்பாண சங்கிலிய மன்னர்களின் இறுதி வாரிசு என ராஜா ரெமிஜியஸ் கனகராஜா தம்மை அடையாளப்படுத்திக்கொண்டுள்ளார்.இவர் தற்போது நெதர்லாந்தில் வாழ்ந்து வருகின்றார்.

சங்கிலிய மன்னர்களின் வழித்தோன்றலான தமக்கு வட மாகாண ஆளுநர் பதவியை வழங்குமாறும், படையதிகாரிகளை தொடரந்தும் ஆளுநர் பதவியில் நீடிக்க வேண்டாம் என கோரியிருந்தார்.

கனகராஜா இலங்கையில் வாழ்ந்த காலப்பகுதியில் செஞ்சிலுவைச் சங்கத்தில் கடமையாற்றியிருந்தார்.

நெதர்லாந்திற்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் ராஜித சேனாரட்னவை, நெதர்லாந்திற்கான இலங்கைத் தூதரகத்தில் வைத்து கனகராஜா சந்தித்து, வட மாகாண ஆளுநர் பதவியை வழங்குமாறு கோரியுள்ளார்.எனினும், இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

கனகராஜா 2007ஆம் ஆண்டு நியூயோர்க்கில் வைத்து, புலிகளின் சமாதானப் பேரவைப் பொறுப்பாளர் புலித்தேவனுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2)

# அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு விளக்க கடிதம் அனுப்பினார் சீ.வீ.கே

ஜாதிக ஹெல உறுமய கட்சியால் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு விளக்கமளிக்கும் கடிதத்தினை ஆணைக்குழுவிற்கு கடந்த 18ஆம் திகதி அனுப்பியுள்ளதாக வடமாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண அவைத் தலைவரின் ஏற்பாட்டில் கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபையன் பேரவைச்செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கக்கோரும் பிரேரணை தொடர்பிலான பிரதிகள் இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் தமிழ் மொழியில் அனுப்பப்பட்டிருந்தது.

இவ்வாறு தமிழில் அனுப்பியமையினால் மும்மொழிக் கொள்கை மீறப்பட்டுள்ளதாகக் கூறி ஜாதிக ஹெல உறுமயக் கட்சி அரச கரும மொழிகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தது.

இதனையடுத்து இது தொடர்பில் விளக்கம் கோரி ஆணைக்குழுவினால் எமக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்தக் கடிதம் தொடர்பாக விளக்கமளிக்கும் கடிதத்தினை தான் அனுப்பியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-6)

# தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டு; இலங்கை கடற்படை மறுப்பு

தமிழக மீனவர்களை சித்திரவதை செய்து அவர்களை கைது செய்வதாக கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கை கடற்படையினர் மறுத்துள்ளனர்.

இவ்வாறான குற்றச்சாட்டு தொடர்ந்தும் முன்வைக்கப்படுவதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் அதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை என்றும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பதன் காரணமாகவே கைது செய்யப்படுவதாக கடற்பண்டயினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் சித்திரவதை செய்வதாக கூறி, இந்திய கரையோர பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வெளியான தகவலை அடுத்தே இலங்கை கடற்படையினரின் கருத்து வெளியாகியுள்ளது.

இதேவேளை, கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 46 தமிழக மீனவர்களை இலங்கை அரசு நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.


இவர்கள் நெடுந்தீவு மற்றும் தலைமன்னார் கடற்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டமைக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே இவர்களின் விடுதலை தொடர்பில் இராஜதந்திர முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதேவேளை 18 தமிழக மீனவர்கள் இன்னமும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### தம்பிமுத்து சுந்தரலிங்கம்

பெரியவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் சுவேன்போ, பாரூம்,ஈகாஸ்ற் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சுந்தரலிங்கம் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Herning Sygehus Kapel,Norgaards Alle 24(Overgade 2),7400 Herning, Denmark என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி மகாதேவன் ஜெயரஞ்சிதம்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் ஜெயரஞ்சிதம் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Chambre Mortuaire de l'Hospital Pitie Salpetriere 22,Rue Bruant Paris 13emeஎன்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி குலசேகரம்பிள்ளை கண்ணம்மா



புங்குடுதீவு ஊரதீவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா சிட்னியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம்பிள்ளை கண்ணம்மா கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரிய்யகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு 02, Boyce Ave Strathfield, Nsw 2135,Sydney Australia என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### சின்னத்துரை ஆனந்தநடராஜா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆனந்தநடராஜா(ஓய்வு பெற்ற பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்) நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு வவுனியா இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### வஸ்ரியாம்பிள்ளை அருளானந்தம்



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்ரியாம்பிள்ளை அருளானந்தம் நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று வியாழக்கிழமை நவாலி கல்லுண்டாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# போர் அழுத்தங்களில் இருந்து மீள படையினருக்கு யோகா பயிற்சி

(கொழும்பு)

இலங்கையின் சுமார் 3 இலட்சம படைவீரர்களுக்கு யோகாசன பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன

போரின் பின்னர் ஏற்பட்டுள்ள அழுத்தங்களை தவிர்ப்பதற்காகவே இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இந்திய செய்தி கூறியுள்ளது

இலங்கை இராணுவத்தின் ஊடக அறிக்கை ஒன்றின்படி படையினருக்கான யோகாசன தங்குமிட பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டது.

இந்த நிலையத்தில் ஆயுதப்பயிற்சி பெற்ற படைவீரர்களுக்கு மாத்திரம் யோகா பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன

இதற்காக கம்பஹாவில் 100 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது

இந்தநிலையில் படையினருக்கான யோகா நிலையம் என்ற அடிப்படையில் இது ஆசியாவில் முதல் நிலையமாக அமையும் என்று படைத்தரப்பு குறிப்பிட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பாதுகாவலன் பிரபாகரன்; வடக்கு மாகாண சபையில் ஒலித்தன குரல்கள்

பேருவளை, அளுத்கம, தர்கா நகர், வெலிப்பன்ன ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற இன அழிப்புத் தாக்குதல்களை கண்டித்து வடக்கு மாகாண சபையின் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தகைய இனவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபரினையும் வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 11 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போதே முஸ்லிம்கள் மீதான தாக்குதலினை கண்டித்து பிரேரணை உட்பட 6 பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு எதிர்க்கட்சி உறுப்பினர் இ.அங்கஜனால் முன்மொழியப்பட்ட மேலுமொரு பிரேரணை நிறைவேற்றப்படாது சர்ச்சை காரண



மாக பிரேரணை ஆய்வு அடுத்த அமர்வுக்கு பிற்போடப்பட்டது.

சபை அமர்வு வழமையாக காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். எனினும் நேற்றைய தினம் இயந்திர கோளாறு காரணமாக சபை கூட்டத்திற்கான மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

இதனால் 9 மணிக்கு ஆரம்பமாக வேண்டிய சபை நடவடிக்கைகள் சுமார் ஒரு மணித்தியாலயம் கடந்த நிலையில் மின்சாரம் இல்லாமலேயே அவைத் தலைவரினதும் செங்கோலின் வருகையுடனும் ஆரம்பமாகியது.

சபையின் ஆரம்பமே கோணலாக இருந்ததோ என்னவோ சபை முடியும் வரையிலும் சபை உறுப்பினர்களில் வழமையான பீரங்கிப் பேச்சாளர்கள் தேவையற்ற பேச்சுக்களை அள்ளி வீச ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஏன் ஊடகவியளாளர்களும் கடுப்ப டைந்திருந்தனர்.

அவ் உறுப்பினர்கள் கடைசி வரை சபையினை குழப்பியடித்த தோடு தேவையற்ற பேச்சுக்களினாலும் நேரத்தை வீண் விரயம் செய்தனர்.

யாழ். நகரில் நடைபெற்ற பேராட்டமொன்றில் பிரபாகரன் எங்கே? என கேட்டு மக்கள் அழுகின்றனர் என வடக்கு உறுப்பினர் அஸ்மினால் தொடக்கி வைக்கப்பட்ட பிரபாகர நாமங்கள் நேற்றைய தினமும் பலரது வாய்களில் ஒலித்தது.

அளுத்கம கலவரத்தின் பின்னணி ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இதன் பின்னணியில் பலர் உள்ளனர். இக்கலவரம் தெற்கிலிருக்கும் சிறுபான்மை மக்களை அப்புறப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இது மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்பதனை முன்னணியாக எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

தன்னால் வழங்கப்பட்ட பிரேரணைகள் சபை அமர்வில் எடுத்துக் கொள்ளப்படாததால் கடும் குழப்பமடைந்த சிவாஜிலிங்கம் தனது இருக்கையினை விட்டு கீழிறங்கி தரையில் சம்மணம் போட்டு அமர்ந்து அவைத் தலைவர் செங்கோலினை இந்த ஏரியாவால் கொண்டு போகட்டும்பார்ப்பம் என அச்சுறுத்தினார்.

**சட்டம் நித்திரை;**
**சட்டத்தரணி சயந்தன்**

யாழ். நூலகம் எரிக்கப்பட்ட போதும் அரச இயந்திரமும் சட்டமும் பார்த்துக் கொண்டு தான் இருந்தது. அதே போல் தான் அளுத்கமவிலும் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றார்.

**முதலைக் கண்ணீர்**

தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1990 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டபோது வாய்திறக்காத சிலர் ஏன் இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

நாம் கண்டன பிரேரணையினை எதிர்க்கவில்லை. ஆனாலும் அப்போது வாய்திறக்காதவர்கள் ஏன் இப்போது வாய் திறக்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கேள்வியெழுப்பினார்.


அவ்வாறாயின் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போது நீங்கள் வாய்மூடித்தானே இருந்தீர்கள். இனி நீங்கள் தமிழ் மக்கள் பற்றி பேசக்கூடாது என்றார்.

முஸ்லிம்களின் தாய்மொழியும் தமிழ் மொழிதான். நான் முஸ்லிம்களுக்காக புலிகளி கூண்டிற்குள் சென்றே கதைத்துள்ளேன் என அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கூறியதோடு இனியும் குரல் கொடுப்போம் என கூறினார்.

**தமிழ் மக்களின் காவலன் பிரபாகரன்**

30 வருடகாலத்திற்கும் மேலாக தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கிய பிரபாகரன் இன்று எம்மிடத்தில் இல்லை.

இன்று தமிழ்த்தேசிய கூட்ட



மைப்பே தமிழ் மக்களின் காவலனாக உள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரபாகரனால் உருவாக்கப்பட்டதனாலேயே தமிழ் மக்கள் இன்றும் அக்கட்சிக்கு ஆதரவு வழக்கி வருகின்றனர் என ஆளும் உறுப்பினர் ஆனல்ட் தெரிவித்தார்.


**இயந்திரத்துப்பாக்கி கோரிய உறுப்பினர்கள்**

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டமை தொடர்பில் சபையில் விவாதம் எழுந்தபோது எமக்கு பொலிஸ் பாதுகாப்பு தராவிட்டால் வடக்கு மாகாண சபை இயந்திர துப்பாக்கி (Machine Gun) பெற்றுத்தருவதோடு ஐ.நா. எமக்கு பயிற்சி வழங்க, பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம் வழங்கவேண்டும் என நக்கலாக கூறினார் ஆளும் உறுப்பினர் அனந்தி.

***பிரேரணைகள்***

**உறுப்பினர்கள் அ.அஸ்மின் மற்றும் இ.இந்திரராசா**

1.அண்மையில் பேருவளை, அளுத்கம, தர்காநகர், வெலிப்பன்ன ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற இன அழிப்புத் தாக்குதல்களைக் கண்டிப்பதோடு நாட்டில் பரவலாக நடைபெறுகின்ற இனவாத அடிப்படையிலான தாக்குதல்



களுக்கு கண்டனத்தைத் தெரிவிப்பதோடு இத்தகைய இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தீவிர அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரை இச்சபை கோருகின்றது.

**உறுப்பினர் ஆ.சி.து.ரவிகரன்**

2.முல்லைத்தீவு மாத்தளன் சாலை பேப்பாரப்பிட்டி பகுதியில் மேற்கொள்ளப்படும் தடை செய்யப்பட்ட அட்டைத் தொழில் நிறுத்தப்படவும் ஏனைய பகுதிக ளில் நடைபெறும் தடைசெய்யப்பட்ட சுருக்குவலை பயன்டுத்துதல், வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல் போன்றவற்றை நிறுத்தவும் பெரும்பாலும் இவற்றுக்கு காரணமான நாயாறுக் கடற்கரையோரத்தில் வந்து அத்துமீறிக்குடியேறிய தென் இலங்கை மீனவர்கள் திருப்பி அனுப்பப்படவும் கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இச்சபை கோருகின்றது.

3.விளையாட்டுத்துறையில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள எமது மாகாணத்தினை முதன்மையான இடத்துக்குகொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் இளைஞர், யுவதிகள் பயிற்றுவிக்கப்பட வேண்டுமெனவும் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு இவ்விடயத்தில் அர்ப்பணிப்புடனும் மாவட்டங்களுக்கிடையில் பாரபட்சமின்றியும் செயற்பட வேண்டுமெனவம் இச் சபை கோருகின்றது.

4.தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்குக் கடந்த 2006 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் தரம் 3-II இற்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

இதே காலப்பகுதியில் வன்னித் தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படாமல் 2013. 07.01 முதல் ஆசிரிய உதவியாளர் என்ற நியமனமே வழங்கப்பட்டது. எனவே ஒரே காலப்பகுதியைக் கொண்ட வன்னித் தொண்டர் ஆசிரியர்களையும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-IIஇற்குள் உள்ளீர்ப்புச் செய்ய வேண்டுமெனவும் கல்வி அமைச்சினைக் கோருகின்றேன்.

**உறுப்பினர் பா.கஜதீபன்**

5.கடந்த 2009, 2013 ஆண்டு காலப்பகுதிகளில் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களை அவர்கள் உதவியாளர்களாக் உள்வாங்கப்பட்ட காலப்பகுதியில் இருந்தே ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாகாண கல்வி அமைச்சின் ஊடாக மத்திய கல்வி அமைச்சை இச்சபை கோருகிறது.

**உறுப்பினர் இ.அங்கஜன்**

6.2008 ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் ஆசிரியர் வகுப்பு 3-I ஆம் தர ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்பட்டது.

2008. 08.13 ஆம் திகதி வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதத்தின் 4 ஆவது பந்தியில் நியமிக்கப்பட்ட பாட சாலையில் 10 வருட காலத்திற்கு தொடர்ச்சியாக சேவையற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களது சேவைக்காலத்தை 10 வருடத்தை 05 வருடங்களாக குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாகாணக் கல்வி அமைச்சை இச்சபை கோருகிறது.

7.வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு கணித, விஞ்ஞான நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாகாணக் கல்வி அமைச்சை இச்சபை கோருகிறது.

**முடிபு**

பின்னர் சுகாதார அமைச்சின் இழுபறிகள் தொடர்பில் ஒரு சில உறுப்பினர்களின் விவாதங்களுடன் சபை பிற்பகல் 3.30 மணியளவில் முடிவுக்கு கொண்டுவரப்படுவதாக அவைத்தலைவரினால் அறிவிக்கப்பட்டது.

**அடுத்த அமர்வு**

வடக்கு மாகாண சபையின் 12 ஆவது அமர்வு எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு கூடும் என அவைத்தலைவர் அறிவித்தார்.

**உ.சாளீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுகுடி சொற்கேளாது
சாகிறவன் மருந்து குடியான்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தாய் மாமன் கிருஷ்ணனாலும் அபிமன்யுவைக் காப்பாற்ற முடியவில்லை

காப்பியங்கள், இதிகாசங்கள் இந்த உலகத்திற்குப் போதிப்பவை என்ன என்பது குறித்து ஆழமாகப் பார்ப்பது அவசியம். இதிகாசங்களை வெறும் புராணக் கதையாக அறிய விளையும்போது அது சுவாரஸ்யமான கதையாகத் தெரியுமே அன்றி அதற்குள் இருக்கக் கூடிய தத்துவங்களை உணர முடியாமல் போகும்.

எனவே இதிகாசங்களைப் படிக்கும் போதே அவை எடுத்துரைக்கும் உண்மைப் பொருள்களை நாம் உணர வேண்டும். அந்தவகையில் மகாபாரதத்தில் வருகின்ற ஒரு கட்டம் இது.

அபிமன்யு அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்த மகா வீரன். தன் தாயின் வயிற்றில் இருக்கும் கால், அருச்சுனன் சுபத்திரைக்குக் கூறிய வியூகம் உடைக்கும் போர்த்தந்திரத்தைக் கற்றுக் கொண்டவன் அவன். கருவிலே கற்றல் இடம்பெறுகின்றது என்பதை ஒரு யுகம் முன்னோக்கி கூறிய பெருமை மகாபாரதத்துக்கு உண்டு.

இவ்வாறாக தன்தாயின் வயிற்றிலிருந்த போதே வியூகத்தை உடைக்கக் கற்றுக்கொண்ட அபிமன்யு; அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்த மகன் என்பதற்கு அப்பால், கிருஷ்ணபரமாத்மாவின் மருகன் என்பது இங்கு நோக்குதற்குரியது. அதாவது சுபத்திரை கிருஷ்ணனின் தங்கை.

ஆக, கிருஷ்ணபரமாத்மாவை தாய்மாமனாகப் பெற்ற பெருமையும் அபிமன்யுவைச்சாரும். இத்துணை வீரமும் ஆட்பலமும் ஞான பலமும் கொண்ட அபிமன்யு போர்களத்தில் இறந்து போகின்றான் என்ற செய்தி ஆத்திரத்தைத் தருவதுமட்டுமல்ல, அதிசயத்தையும் தோற்றுவிக்கிறது.

பாரதப் போரை நடத்தியதே கிருஷ்ணபரமாத்மா தான். கிருஷ்ணன் நினைத்திருந்தால் பாரதப் போரை தடுத்திருக்கமுடியும். ஆனால் அதனை அவன் செய்யவில்லை.

யுத்தத்தை நடத்தி இந்த உலகிற்குத் தர்மம் நிலை நாட்டப்படும் என்ற செய்தியைச் சொல்லும் பெரும் பொறுப்பு கிருஷ்ணபரமாத்மாவிடம் இருந்தது.

கூடவே பகவத்கீதை என்ற தத்துவ உபதேசத்தை தந்தருளும் கடமையையும் அவன் செய்தாக வேண்டும். நிலைமை இதுவாயின் அபிமன்யுவை போர்க்களத்தில் காப்பாற்ற முடியாமல் போனது ஏன்? என்ற கேள்வி எழுகிறது.

கிருஷ்ணன் நினைத்திருந்தால், அபிமன்யுவை காப்பாற்றியிருக்க முடியாதா? என்ற வாதமும் முன்வரும். இங்குதான் கிருஷ்ணன் நினைத்தாலும் அபிமன்யுவைக் காப்பாற்ற முடியாதென்ற மகா தத்துவம் நிறைவேறுகிறது.

ஆம், அபிமன்யுவின் மரணம் சொல்கின்ற செய்தி, கடவுள் நினைத்தாலும் சிலவற்றைக் காப்பாற்ற முடியா தென்பதாகும்.

அதாவது கர்மவினை சூழ்ந்துவிட்டால் தெய்வப் பிரசன்னம் இருந்தாலும் ஆளைக்காப்பாற்ற முடியா தென்பதே மகா தத்துவம்.

இந்தத் தத்துவத்தை புரிந்துகொள்வது கடினமாயினும் உண்மைகள் இலகுவான புரிதலுக்கு உட்பட்டவை அல்ல என்ற உண்மையையும் இவ்விடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்.

அபிமன்யு பற்றிய தத்துவம் இப்போது – இவ்விடத்தில் எதற்காக? என்ற உங்கள் முணுமுணுப்புகள் நமக்குக் கேட்காமலும் இல்லை.

எல்லாம் காரண காரியத்தோடுதான். இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைக்குரிய ஏற்பாடுகளை ஐ.நா சபை மிக நிதானமாகச் செய்துவருகிறது.

விசாரணைக் குழுவின் வல்லுநர்கள் யார் என்ற அறிவிப்புகளும் வெளியாகிவிட்டன .

ஆனால் இன்னமும் விசாரணைக்குழுவை ஏற்க முடியாதென்ற செய்தியை சொல்வதில் இலங்கை அரசின் இறுமாப்பு கொஞ்சமும் குறைந்தபாடில்லை.

என்ன செய்வது? கர்ம வினை சூழ்ந்துவிட்டால், ஆட்சியில் ஒரு துரும்பும் கொடேன் என்பான் துரியோதனன். செத்தாலும் சீதையை விடுதலை செய்யேன் என்பான் இராவணன்.

இந்த வரிசையில், எது வரினும் வடக்குக் கிழக்கை இணைய விடமாட்டோம். தமிழருக்கு உரிமை கொடோம் என்பர் இலங்கை ஆட்சியாளர்கள். கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்கும் செயல்தான் இவை அனைத்தும்.

# சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும்

## பிரிட்டன் உயர்ஸ்தானிகரிடம் நீதி அமைச்சர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

சட்டத்தையும், ஒழுங்கையும் சரிவர நிலைநாட்டுவதிலும், சட்டத்தின் ஆட்சியை உரிய முறையில் செயற்படுத்துவதிலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இந்நாட்டின் சிறுபான்மை சமூகத்தினரான முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இனவாத வன்செயல்கள் வெகுவாக உணர்த்துவதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரெங்கின், அமைச்சர் ஹக்கீமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தாருஸ்ஸலாம் தலைமையகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் மேலும் கூறுகையில்,

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டு வரும் காலகட்டத்தில் தீவிரவாத அமைப்புகள் சில இந்நாட்டு முஸ்லிம்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதை மிதவாத பௌத்தர்கள் கூட ஆதரிப்பதிலை.

சமூகத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டும்போது தம்மை நாட்டைக் காட்டிக்கொடுப்பவர் என்றும், சமூகத்துரோகி என்றும் பேரினவாத அரசியல்வாதிகள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

ஆனால், எமது கடமையையே நாம் நிறைவேற்றி வருகிறோம். அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக தாம் ஜெனிவாவுக்குச் சென்று தமது பங்களிப்பை உரிய விதத்தில் செய்தோம்.

அடிப்படைவாத முஸ்லிம்களின் செயற்பாடுகள் இங்கு அதிகரித்து வருவதாக கூறப்படுவதற்கு காரணம் இஸ்லாத்தின் மீதான பீதியேயாகும்.

அவ்வாறு கூறப்படுவதில் உண்மைத தன்மை இருக்குமானால், யுத்தத்தின் பின்னர் மும்மடங்காகியுள்ள உளவு பிரிவினரால் அத்தகையோரை கண்டு பிடிப்பது பெரிய காரியமாக இருந்திராது.

முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கூட்டாக சந்தித்து உரையாடியதாகவும், இந்த பிரச்சினை ஒரு சமூகத்துக்கு மட்டும் உரியதல்ல என்றும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக உருவாகியுள்ளதாகவும், நாட்டு மக்களுக்கு அறிவிப்பொன்றை விடுக்குமாறும், பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துமாறு வேண்டிக் கொண்டதாகவும கூறினார்.

அதற்கு ஜனாதிபதி உடனடியாகவே இணக்கம் தெரிவித்தார்.

இங்கு இடம்பெறும் நிகழ்வுகள் பற்றி தமக்கு அடிக்கடி தொலைபேசி அழைப்புகளும், தகவல்களும் கிடைத்த வண்ணம் இருப்பதாக உயர்ஸ்தானிகர் கூறிய போது, நவீன விஞ்ஞான தொழிநுட்ப யுகத்தில் இணையத்தில் சமூக வலைத்தளங்கள் ஊடாக ஓரிடத்தில் இடம் பெறும் சம்பவம் தொடர்பான செய்திகள் நொடிப்பொழுதில் உலகமெங்கும் சென்றடைகின்றன என அமைச்சர் ஹக்கீம் பதிலுரைத்தார். (அ-2)

# வர்த்தக உடன்பாட்டு ஒப்பந்தம் இவ்வருடத்திற்குள் நடைமுறைக்கு

## பிரதி உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

கடந்த 3 வருடங்களாக இடம்பெற்று வரும் இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தங்களை முன்னிட்டு நாம் பெரிதும் மகிழ்வடைகிறோம் என இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் குமரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் தனது பிரியாவிடை நிகழ்வினை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கையின் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாட் பதியுதீனை கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இந் நிகழ்வில் இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் பற்றி கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கீழுள்ள புதிய அரசாங்கத்தின் படி எமது குறிக்கோள் 'பொருளாதாரம் மற்றும் வர்த்தகமேயாகும்'. சாதகமான இவ் வர்த்தக நடவடிக்கைகள் மூலம் இலங்கை பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதமர் நரேந்திர மோடி சிறந்த தொரு நம்பகமான பொருளாதார மேலாளர். இதன்மூலம் அயல் நாடுகள் பல பொருளாதாரத்தில் நன்மையடையும். எவ்வாறாயினும் முதன்மையான இரண்டு விடயங்களான ஓட்டோ மொபைல் துறை உற்பத்தி, மருந்து உற்பத்திகளை முன்னெடுப்பதிலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செயற்பாட்டு ஒப்பந்தங்களான சோதனை மற்றும் தரத் தேவைகள், சுங்க வசதிக்கான ஒப்பந்தங்கள் பற்றிய முன்னேற்பாட்டுச் சுற்றறிக்கை எம்மால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சில இலங்கை ஏற்றுமதியாளர்கள் சென்னையில் உள்ள சோதனைச் சாவடிகளில் பிரச்சினைகளை எதிர்கொள்வதை முன்னிட்டு இவ்வாறான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின் சம்மத உடன்பாட்டின் மூலம் விரைவாக இரு நாட்டுத் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுககு இந்திய அரசு கடமைப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இவ்விரு நாடுகளுககிடையிலான வர்த்தக உடன்பாட்டு ஒப்பந்தம் இவ்வருட இறுதிக்குள் நடை முறைக்கு வரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற வர்த்தக பொருளாதாரம் 2012 உடன் ஒப்பிடும் போது 2549.8 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 2950 மில்லியன் அமெரிக்க டொலராக 2013 இல் வளர்ச்சியடைந்துள்ளது என திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (அ-2)

# சஞ்சிகை வெளியீடு

யாழ்.பல்கலைக்கழகம் ஊடகக் கற்கைகள் நான்காம் வருட மாணவர்களின் பதிவு சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வெள்ளிககிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் இணைப்பாளர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது சஞ்சிகையை பேராசிரியர் வி.பி.சிவநாதன் வெளியிட்டுவைக்க பேராசிரியர் கி.விசாகரூபன் பெற்றுக் கொள்வார்.

சஞ்சிகை மதிப்புரையை யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை தலைவர் இ.ரட்ணம் வழங்குவார். (அ)

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### சொர்க்கம் வேண்டுமா?

★ பெரும் பாவியை குறித்து புறம் பேசுவது குற்றமாகாது. தான் மறைவாக செய்கின்ற பாவங்களை வெளியில் சொல்பவனைக் குறித்து புறம் பேசுவது குற்றமாகாது.

★ மனைவியை திருப்திப்படுத்துவதற்காக பொய் சொல்லலாம். போர்க்களத்தில் எதிரியை தந்திரத்தால் வெல்வதற்காக பொய் சொல்லலாம்.

★ அல்லாஹ்வுக்கு மிக பிரியத்திற்குரிய தலம் பள்ளிவாசலாகும். அவனுக்கு மிக மிக வெறுப்புக்கு உரிய இடம் கடைவீதியாகும்.

★ சொர்க்கம் வேண்டுமா? விருப்பம் கொண்டவர் பெற்றோர்களை சந்தோஷப்படுத்தவும்.

★ நீங்கள் இரவில் அதிகமாக தூங்காதீர்கள். ஏனென்றால் அதிகமாக தூங்கினால் கியாமநாளில் ஏழையாக எழுப்பப்படுவீர்கள்.

★ பொறாமை மனிதனுடைய நன்மைகளை அழித்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷாகிரியின் ஹட்ரிக் கோல்களால் அடுத்த சுற்றில் சுவிட்சர்லாந்து

உலக கோப்பை காற்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஹோண்டுராஸ் அணியும் சுவிட்சர்லாந்து அணியும் மோதின. தொடக்கம் முதலே சுவிட்சர்லாந்து வீரர்களின் ஆதிக்கம் காணப் பட்டது.

ஆட்டம் தொடங்கிய 3 ஆவது நிமிடத்தில் சுவிட்சர்லாந்தின் ஷாகிரி அடித்த பந்தை ஹோண்டுராஸ் கோல் கீப்பர் வல்லாடரஸ் லாவகமாக தடுத்தார். ஆனால் 6 ஆவது நிமிடத்தில் ஷாகிரி கோல் அடித்து சுவிஸ் அணியின் கோல் கணக்கை ஆரம்பித் தார். ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த ப்ரீ கிக் வாய்ப்பை கோலாக மாற்ற தவறினார் ஷாகிரி. ஆட்டத்தின் 30 ஆவது நிமிடத்தில் ஷாகிரி மீண்டும் ஒரு கோல் அடித்து தாங்கள் அணியின் கோல் கணக்கை 2 ஆக உயர்த்தினார். ஆட்டத்தின் 45 ஆவது நிமிடம் வரை வேறு கோல்கள் எதுவும் அடிக்கப்படாமல் இருந்த போது முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின் ஆட்டத்தின் 52 ஆவது நிமிடத்தில் ஹோண்டுராசின் பெங்ஸ்டன் அடித்த ஷாட்டை சுவிஸ் அணியின் ரோட்ரிகஸ் கோல் விழாமல் தடுத் தார். ஆட்டத்தின் 66 ஆவது நிமிடத்தில் ஹோண்டுராசின் பாலாசி யோசுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. ஆட்டத்தின் 71 ஆவது நிமிடத்தில் ஷாகிரி தனது மூன்றாவது கோலையும் அடித்து அசத்தினார். ஆட்டத்தின் 78 ஆவது நிமிடத்தில் ஹோண்டுராசின் நஜர் அடித்த பந்தை சுவிஸ் கோல் கீப்பர் பெங்காலியோ லாவகமாக பாய்ந்து தடுத்தார்.

இரு அணிகளும் மேற்கொண்டு கோல் எதுவும் அடிக்கப்ப டாத நிலையில் இரண்டாவது பாதி முடிவுக்கு வந்தது. இறுதியில் 0:3 என்ற கோல் கணக்கில் ஹோண்டுராசை சுவிட்சர்லாந்து வீழ்த தியது. ஆட்டநாயகனாக ஷாகிரி தேர்ந்தெடுக்கப்பட்டார். (க)



## ஆட்டம் சமநிலையில் முடிந்தமையால் ஏமாற்றத்துடன் வெளியேறியது ஈகுவடார்




உலக கோப்பை காற்பந்து போட் டியில். நேற்று நடைபெற்ற மற்று மொரு ஆட்டத்தில் ஈகுவடார் அணி யும் பிரான்ஸ் அணியும் மோதின.


ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் பிரான்சின் போக்பா அடித்த பந்தை ஈகுவடார் அணியின் மிண்டா லாவ கமாக தடுத்தார். ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் பிரான்சின் சிசோகோ அடித்த பந்தை ஈகுவடார் கோல்கீப்பர் டோமிங்கஸ் லாவகமாக செயற்பட்டு தடுத்தார்.

ஆட்டத்தின் 35 ஆவது நிமிடத் தில் ஈகுவடாரின் நோபோ அடித்த பந்தை கொசியன்லி லாவகமாக பாய் ந்து தடுத்தார். 38 ஆவது நிமிடத்தில் பிரான்சின் பொக்பா அடித்த பந்தை ஈகுவடாரின் கோல் கீப்பர் டோமிங் கஸ் லாவகமாக பாய்ந்து தடுத்தார். முதல ஆட்டம் முடியும் வரை இரு அணிக ளும் கோல் ஏதும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதி தொடங்கப் பட்ட பின் ஆட்டத்தின் 47 ஆவது நிமிடத்தில் பிரான்சின் க்ரீஸ்மேன் அடித்த பந்தை ஈகுவடாரின் டோமிங் கஸ் தடுத்தார். ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் ஈகுவடாரின் வேலன்சி யாவுக்கு சிகப்பு அட்டை காண்பிக்கப் பட்டது. 62 ஆவது நிமிடத்தில் பிரா ன்சின் மட்டுயிடி அடித்த பந்தை ஈகு வடார் அணியின் கோல் கீப்பர் டோமி ங்கஸ் மீண்டும் லாவகமாக செயற் பட்டு தடுத்தார்.

82 ஆவது நிமிடத்தில் ஈகுவடாரின் இபாரா அடித்த பந்தை பிரான்சின் லோரிஸ் லாவகமாக செயற்பட்டு தடுத்தார். இறுதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காத சூழ்நிலை யில் ஆட்டம் டிராவானது. ஆட்ட நாய கனாக ஈகுவடார் அணியின் கோல் கீப்பரான டோமிங்கஸ் தேர்வு செய் யப்பட்டார்.

## யூனியனை வீழ்த்தியது சென்றலைட்ஸ் அணி



பருவகாலம் 2ற்கான ஜே.பி. எல். போட்டிகள் யாழ்.இந்துக்கல் லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் கடந்த சனிக் கிழமை இடம் பெற்ற அரையி றுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணியும் சென்றலைட்ஸ் விளை யாட்டுக் கழக அணியும் மோதியது.

நாணயச்சுழற்சியில்வென்ற தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுப்பாட்டத்தை தெரிவுசெய்தது. இதன்படி முதலில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி துடுப்பெடுத்தாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களை குவித்தது. இதில் வதுஷனன் 78 ஓட்டங்களையும், எட்வேட்எடின் 37 ஓட்டங்களையும், ஷெல்டன் 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 17 ஓட்டங்கள் கிடைத்தன. பந்துவீச்சில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி சார்பில் சுஜந்தன், தயாளன், தீபன், ஜான்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 192 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதில் டக்ஷயன், சுஜந்தன் தலா 13 ஓட்டங்களையும் ரகுபதி 12 ஓட்டங்களையும், சதீஷ்கண்ணா 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் ஜெரிக்துஷான் 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், வதுஷனன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கிரிஷாந்த் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கோகுலன் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின்ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் வதுஷனன் தெரிவானார். இந்த வெற்றி மூலம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (க-23)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தும்பளை கருணை உள்ளம், விண்மீன் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வல்வை ரெயின்போ மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு சென்.அன்ரனீஸ் (மணற்காடு) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவகுமாரன் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஹென்றீசியன் பிறிமியர் லீக் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர நடைபெற்று வருகின்றது.


இதில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருக்குமரன் உரும்பிராய் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.


அதனையடுத்து பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதைத்தொடர்ந்து இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ள மூன்றாவது போட்டியில் ஆதவன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்.அன்ரனீஸ் பெரியவிளான் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

இறுதியில் இரவு 8 மணியளவில் நடைபெறவுள்ள நான்காவது போட்டியில் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாமகள் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2003ஆம் ஆண்டிலிருந்து நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மண்டைதீவு தில்லேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நடராஜர் மற்றும் அம்மன் விக்கிரகங்கள் நேற்றுக்காலை ஆலய பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டன. நயினை நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராஜா விக்கிரகங்களைக் கையளிக்க தில்லேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் சார்பில் நயினை ஜெகநாதன் கனகாம்பிகை தம்பதியினர் பொறுப் பேற்றுக் கொண்டனர். கையளிக்கப்பட்ட விக்கிரகங்கள் மண்டைதீவு தில்லேஸ்வரர் ஆலயத்திற்கு கடல்வழியாக எடுத்துவரப்பட்டன. படங்கள் :- கரன்

# ஈரானை வென்றது போஸ்னியா



உலக கிண்ண காலபந்து போட்டியின்நேற்றைய இரண்டாவது ஆட்டத்தில் ஈரானும் போஸ்னியா வும் மோதின.

ஆட்டத்தின் 4-வது நிமிடத்தில் போஸ்னியாவின் ட்செகோ அடித்த பந்தை ஈரானின் கோல் கீப்பரான ஹகிகி அற்புதமாக தடுத்தார்.

ஆட்டத்தின் 23-வது ஓவரில் ட்செகோ மீண்டும் ஒரு கோல் அடித்து தான் இருப்பதை உறுதி செய்தார். ஆட்டத்தின் முதல் பாதி முடிவடை யும் போது போஸ்னியா 2 கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

சிறிது நேர இடைவெளிக்கு பின் ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது. ஆட்டத்தின் 59-வது நிமிடத்தில் போஸ்னியாவின் ப்ஜானிக் கோல் அடித்து அசத்த 82வது நிமிடத்தில் ஈரானின் ரெசா ஒரு கோல் அடித்து அசத்தினார்.

அடுத்த நிமிடத்திலேயே போஸ்னி யாவின் வ்ரசாஜெவிக் தன் பங் குக்கு ஒரு கோல் அடித்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் முடிவில் 3-1 என்ற கோல் கணக் கில் ஈரானை வீழ்த்தியது போஸ் னியா. ஆட்ட நாயகனாக போஸ்னியா வின் ட்செகோ தேர்ந்தெடுக்கப் பட்டார். (க)

# இத்தாலி வீரரைத் தாக்கிய சுராசுக்கு 4 மாத போட்டித்தடை

உலகக்கிண்ண கால்பந்து போட்டி யின்போது இத்தாலி வீரரை கடித்த சுராசுக்கு 4 மாதம் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

உருகுவே அணியின் முன்னணி கால்பந்து வீரர் லுயிஸ் சுராஸ் உலகின் தலைசிறந்த வீரரான அவர் உலகக் கிண்ண தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் 2 கோல் அடித்து முத்திரை பதித்திருந்தார். ஆனால், இத்தாலிக்கு எதிரான ஆட்டத்தில் வீரரை கடித்ததால் சர்ச்சையில் சிக் கினார்.

ஆட்டத்தின் 80-வது நிமிடத்தில இத்தாலி பின்கள வீரர் சிலினியின் தோள்பட்டையில் சுராஸ் கடித்தார். தொலைக்காட்சி ரீபேளயில் இத்தாலி வீரரை அவர் கடிப்பது தெளிவாக தெரிந்தது. நடுவரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டபோது அதை அவர் கவனிக்காததால் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்னர் பாதிக்கப் பட்ட சிலினியன் கடித்த பகுதியில் காயம ஏற்பட்டதை காண்பித்தார்.

இதையடுத்து இந்த விவகாரம் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் ஒழுங்குநடவடிக்கைகுழுகவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. பிபாவின் ஒழுங்கு நடவடிக்கை குழுவும் சுராஸ மது அதிகாரபூர்வமான குற்றச்சாட்டை தெரிவித்தது.

இதையடுத்து 4 மாதம் கால்பந்து போட்டி சம்பந்தப்பட்ட எந்த நிகழ்வு களிலும் சுராஸ் கலந்துகொள்ளக்கூடாது என்று பிபா நேற்று தடை விதித்தது. இதனால், உலகக் கோப்பை தொடரில அடுத்து வரும் 9 போட்டிகளிலும் அவர விளையாட முடியாது. மேலும் பிரீமியர லீக் தொடரிலும் முதல் 9 போட்டிகளில் அவர் பங்கேற்க முடியாது. (க)

# வதிரி டயமன்ஸ் அரையிறுதிக்கு தெரிவு

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதி யுடன் கற்கோளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவ ளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவு டன் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற காலி றுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து வல்லை ஆதி சத்தி அணி மோதியது.

இப் போட்டியில் வதிரி டயமன்ட் அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட் டிக்கு முன்னேறியுள்ளது. (க-19)

# ஐ.நா மூவர் குழுவிற்கு...

தின் நீதிபதியுமான டேம் சில்வியா கார்ட்ரைட் அம்மையார் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் சட்டவாளர் சங்கம் மற்றும் பாகிஸ் தான் மனிதவுரிமைகள் ஆணைக் குழு ஆகியவற்றின் முன்னாள் தலைவருமான அஸ்மா ஜஹாங் கிர் ஆகிய மூவரும் இந்த விசா ரணைக்குழுவுக்கு நிபுணர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று முனதினம் புதன்கிழமை ஐ.நா மனித வுரிமை கள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அதிகாரப்பூர்வமாக அறி வித்திருந்தார்.

இந்நிலையில், இந்த நியமனம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சா ளர் மாரி ஹார்ப் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், நல்லாட்சி, மனிதவுரிமை விவகாரம், நல்லி ணக்கம் மற்றும் குற்றச்செயல் களுக்கு தண்டனை விதித்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பில் நிலுவையாக உள்ள பிரச்சினை களுக்கு இலங்கை அரசாங்கம் காத்திரமானதும் ஸ்திரமானது மான தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் ஐ.நா விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இந்த விசாரணைக்கான ஆலோ சனைக்குழுவில் திறமையான மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என் பது வரவேற்கத்தக்க விடயம் என் றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற உரிமை மீறல்கள் தொடர்பில் விசா ரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழு குறித்து பிரித்தா னிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் வரவேற்பை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு இந்த விசாரணையானது ஒரு முக் கியமான படிக்கல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச்மாதம் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இலங்கை தொடர்பில் ஸ்தாபிக்கப்பட்ட விசாரணைக கான நிபுணர்களை நியமத்துள்ளதாக நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கை நான் வரவேற்கின்றேன்.

இங்கிலாந்து இந்த விசாரணை களுக்கு தொடர்ந்தும் அழைப்பு விடுத்துடன் அதனை பாதுகாக்க முக கிய பங்காற்றியது.

இந்த விசாரணையானது உண மையை நிலைநாட்டுவதற்கும் இலங் கையில் நல்லிணக்கத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப் பதற்குமான ஒரு முக்கியமான நட வடிக்கையாகும்.

மார்டி அத்திசாரி, அஸ்மா ஜஹா ங்கீர், சில்வியா கார்ட்ரைட் ஆகி யோரை கொண்ட ஒரு வலுவான தெளிவான விசாரணைக்குழுவை மனித உரிமை பேரவை நியமித் துள்ளது.

இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்துடன் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க வேண் டும் என வலியுறுத்துகிறேன்.

விசாரணையில் ஈடுபடுபவர் கள், அச்சுறுத்தல் இன்றி, அச்ச மின்றி விசாரணைகளில் ஈடுபட முடியும் என்பதை இலங்கை அர சாங்கம் உறுதிப்படுத்த வேணடும்.

அரசியல் தீர்வு, நல்லிணக்கம், நீதி, பொறுப்புக் கூறல், ஆயுத மோதல்கள் மற்றும் இன்றைய காலத்தின் கவலை தொடர்பிலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்துவது குறித்தும் இலங்கை அரசாங்கம் அர்த்த முள்ள உறுதி யான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமை பேரவையின் தீர்மா னத்தின் ஊடாக தொடர்ந்தும் நான் வலியுறுத்தி வருகின்றேன்.

இலங்கையில் இந்த பிரச்சினை களில் முன்னேற்றங்களை ஏற் படுத்துவதற்கான வசதிகளுக்கு உதவிக்ளை வழங்க பிரித்தானிய அரசாங்கம் எப்போதும் தயாரா கவே உள்ளது எனவும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (எ-11)

# சிவாஜிலிங்கம்...

வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து நான் நாடாளுமன்ற உறுப்பினராக இல்லாத காலப்பகுதியிலும் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புத் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் கொழும்பிலி ருந்த வந்த அறிவுறுத்தலுக்கமைய அந்தப் பாதுகாப்பு நேற்றுமுன்தினம நள்ளிரவு முதல் மீளப் பெறப்பட்டுள் ளது என்று அவர் மேலும் தெரிவித தார்.

வடமாகாண சபையின் ஆளும் கட்சியான தமிழ்த்தேசிக்கூட்ட மைப்பின் உறுப்பினர்களாக திருமதி அனந்தி சசிதரன் பாலச்சந்திரன், கஜதீபன் மற்றும் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோருக்கு வழங்கப் பட்ட தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப் பினையாழ்மாவட்டப்பிரதிப்பொலிஸ்மா அதிபர்றொஹான்டயஸ்விலக்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

# திட்டமிட்ட இனக் கலவர...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அளுத்கமவில் நடைபெற்ற இனக்கலவரம் போன்று 1958 களில் வன்முறைகள் வெடித்த தனை நாம் அனைவரும் பார்ததிருக் கின்றோம்.

இதேபோல் 1956 இல் சிங் களம் மட்டும் சட்டம் கொண்டுவரப் பட்ட வேளை 1958 களிலும் இனக் கலவரம் வெடித்துள்ளன. பின்னர் 1983 இலும் இனக் கலவரமொன்று வெடித்திருந்தது.

இவ்வாறு நடைபெற்ற இனக் கலவரங்களிற்கு முன்னர் தமிழர் கள் எங்கு செறிவாக உள்ளனர், தெற் கில் உள்ள தமிழர்களின் இருப்பிடங் கள் தொழில் புரயும் இடங்கள் என் பன திரட்டப்பட்டு அவ்விடங்களிற்கு குறிவைத்து தாக்குதல் நடத்தியிருந் தனர். இவ்வாறானதொரு மிகவும் திட்டமிடப்பட்ட கணிப்பில் தான் அளுத்கம பேருவளை போன்ற இடங்களிலும்தாக்குதல்மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தெற்கில் முஸ்லிம்கள் பொருளா தார மற்றும் வர்த்தகத்துறையில் பலமடைந்து வருகின்றமையினா லேயே இவ்வாறு முஸ்லிம்கள் மீது திட்டமிடப்பட்ட காட்டுமிராண்டித் தாக்குதல்கள் கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ளது.

இவ்வாறான இனக்கலவரங் கள் வடக்கு மாகாணத்திற்கு பொலிஸ் அதிகாரம் வேண்டும் என்பதையே காட்டுகின்றன.

தமிழ-முஸ்லிம் மக்கள் ஒன்று பட்டு முன்னணியாக இனியும் செயற் படாமல் விட்டால் இவ்வாறான தாக் குதல்களிற்கு மீண்டும் சிறுபான்மை இனங்கள் ஆளாக வேண்டும் என் றார் முதலமைச்சர். (விரிவான செயதி 4 ஆம் பக்கத்தில்) (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

தகவலில், இதன் மீதான விசாரணை வரும் ஜூலை மாதம் 7-ம் திகதி முதல் தொடக்கப்படுவதாக நேற்று வியாழக்கிழமை முன்னதாக வந்த அறிவிப்பு கூறியது. ஆனால் பின்னர் வந்த திருத்த அறிவிப்பில், இந்த விசாரணையை, உச்சநீதிமன்றம் ஜூலை 8-ம் திகதி எடுத்துக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில், மரண தண்டனையை குறைக்க மனுக் கொடுத்த மூவரும் விடுதலை தொடர்பில் எந்தவிதமான கோரிக்கையையும் முன்வைக்காத போது எதன் அடிப்படையில் தமிழக அரசு அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தது என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## முஸ்லிம்கள்...

லிம் உறுப்பினர் சரபுல் அனாம் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக தமிழ்த் தரப்பினர்கள் தற்போது முதலைக் கண்ணீர் வடிப்பதாகவும் அதன் வெளிப்பாடாகவே யாழில் போராட்டம் செய்ததாகவும் எரியிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்றே தமிழ்த் தரப்பினர்களின் செயற்பாடு அமைவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதனைத் தொடர்ந்து சபையின் ஆளும் கட்சியின் முஸ்லிம் உறுப்பினர்கள் மற்றும் சபையின் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்த அதே வேளையில் ஆளும்கட்சியான அங்கத்துவக் கட்சியான ஈ.பி.டி.பியினர் மௌனமாகவே இருந்தனர்.

விரும்பியோ விரும்பாமலோ கடந்த காலங்களில் இடம்பெற்ற சில சம்பவங்களிற்காக தொடர்ந்தும் அவ்வாறே எண்ணுவது தவறு. கடந்த காலங்களிலும் தமிழ்த் தரப்புக்கள் முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்ததுடன் முஸ்லிம் மக்களுடன் இணைந்து செயற்பட்டிருக்கின்றனர். இதனைவிடுத்து வரலாறுகளைத் தெரிந்து கொள்ளாமல் இந்தச் சபையில் பேசுவது பொருத்தமற்றது என்று எதிர்க்கட்சியான கூட்டமைப்பு உறுப்பினர் என்.இராஜதேவன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த மாநகர சபையின் பிரதி மேயர் றமீஸ் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து நீண்டகாலமாகவே ஒற்றுமையாகவே செயற்பட்டு வருகின்ற அதே வேளையில் தமிழ் தரப்பினர்கள் முஸ்லிம்களுக்காக அன்றும் குரல் கொடுத்திருப்பதுடன் இன்றும் அதனைச் செய்திருக்கின்றதை யாரும் மறுக்க முடியாது.

சில தரப்பினரின் சுய அரசிலுக்காக தமிழ் -முஸ்லிம் உறவைப் பிரிக்க வேண்டாம். அத்தகைய செயற்பாடுகளுக்கு ஒரு போதும் துணைபோகப் போவதில்லை. ஆகவே எமக்காக தமிழ்த் தரப்பினர்கள் கொடுக்கின்ற குரல்களுக்கு நாம் ஆதரவுளிப்பதுடன் யதார்த்தைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த நாட்டில் சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களையே எதிர்நோக்கி வருகின்றனர். இங்குள்ள இனவாத அமைப்புக்களினால் அளுத்கமவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆகவே எமது கடப்பாடுகளையும் முஸ்லிம் மக்களின் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் முஸ்லிம் மக்களின் வாழ்வும் வளமும் அழிக்கப்படுவதைக் கண்டிக்கிறோம் என்றார்.

இதன்போது எழுந்த கூட்டமைப்பின் உறுப்பினர் கொர்னேலியஸ் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் அளுத்கமவில் இடம்பெற்ற மிலேச்சத்தனமாக தாக்குதல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதுடன் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்பட வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட மாநகர முதல்வர், முஸ்லிம் மக்கள் மீதான தாகுதலை கண்டிப்பதுடன் இத் தாக்குதலுடன் தொடர்புடைய தரப்பினர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவதுடன் இச்சம்பவத்தின் போது அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து மேற்படி விடயங்கள் சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (செ-6)

## ஈராக்...

செய்வது தொடர்பிலான விடயங்களை மறு அறிவிப்பு வரும் வரை கவனமாக கையாள வேண்டும் எனவும் அமைச்சு கூறியுள்ளது.

ஈராக்கில் தற்போதுள்ள இலங்கையர்கள், அங்கு ஏற்பட்டு வரும் பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் தேவையான ஆலோசனைகளையும் பாக்தாத்தில் உள்ள இலங்கை தூதரகத்தை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

பாக்தாத்தில் உள்ள இலங்கை தூதரகத்தை +96477704847458 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் slembirq@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை பிரஜைகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (செ-11)

## அடித்துக்...

வருவதாவது,

கடந்த 1997 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தக் கொலைக் குற்றச்சாட்டில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த தகப்பன் மற்றும் இரண்டு மகன்கள் ஆகியோரை கைது செய்த சுன்னாகம் பொலிஸார, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து மேற்படி வழக்கு 2006ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, வழக்கு மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

தொடர்ந்து யாழ்.மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து பிரதீஸ்வரன் என்பவர் பிரதான குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று தீர்ப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிபதி குறித்த நபருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். (செ-6)

## தனியார்...

யாழ்.நகரத்திற்குச் செல்லும் கச்சேரி-யாழ்ப்பாணம் தனியார் பேருந்தை மறித்தபோது அப்பேருந்து அவன் மீது மோதியுள்ளது.

இவ்விபத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் தனியார் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் கூறினர். மாணவனின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

## கைக்...

தாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். பேருந்து தரிப்பில் கைக் குண்டு இருப்பதனை அவதானித்த பொது மக்கள் ஜே - 286 கிராம அலுவலருக்கு அறிவித்ததையடுத்து கிராம அலுவலர் அச்சுவேலி பொலிஸாருக்கு இவ் விடயம்தொடர்பாக அறிவித்துள்ளார். இதனையடுத்து மேற்படிக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. (செ-6)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


## மரண அறிவித்தல்



### சுந்தரம் குணராசா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் குணராசா 25.06.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் சிவபாக்கியம் தம்பதியினரின் மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரதாசன், கீதாராணி (ஜேர்மனி), வசுந்தராதேவி (ஆசிரியை-யாழ்/பெரியபுலம் ம.வி), வள்ளுவன் (நோர்வே), வாசுகி (ஆசிரியை-செங்குந்தா இந்துக் கல்லூரி), செங்குட்டுவன் (VDF, மாருதி றெடிமெற்ஸ்), நக்கீரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஆனந்தசெந்தூரன் (எதிர்காலப் பசுமை உலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாகபூசணி, பரமானந்தன் (ஜேர்மனி), அம்பிகைபாலன் (பாலசாயி), சாயீஸ்வரி (நோர்வே), றேமளா, நிரஞ்சினி, நளாயினி (ஆசிரியை-யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் குந்தவி, மயூரன், மதுமதி, ராம், அபிராமி, சங்கீர்த்தனன், பிரகதீசன், நந்திதா, ஆதித்தியா, சாருகேசன், கவிசாயினி, ஜனனி, சுருதி, கேதாரநாத், லஷ்சுமிநாத், சாம்பவி, சாய்பிரியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (27.06.2014) இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செந்தூரகம்"
தாளையடி வீதி, திருநெல்வேலி.

தகவல்:-குடும்பத்தினர்.

(இ)


A/L CHEMISTRY

2016 பிரிவு மாணவர்களின் இரசாயன அலை பரீட்சை இல-10 இல் 75% புள்ளிகளிற்கு மேல் பெற்ற முதல் 50 மாணவர்களின் விபரத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய மாணவர்களிற்கு மேலதிக பின்னூட்டல் வகுப்புகள் நடைபெறும்.

ஆசிரியர் திரு.சு.சுரேஸ் குமார்
BSc (Hons) MBA (Lon)
THE SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(6964)

இலங்கை நிர்வாக சேவை (SLAS)

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு சனியும் 8.30-3.30 மணி வரை நடைபெறும்.

விரிவுரையாளர்கள்:-
P.உமாசங்கர்
P.கமல்தாசன்

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
தொ.பே:-0774696695
(C-7753)

IELTS Special Class

செப்ரெம்பர் 06ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு காலை 8.30 தொடக்கம் 11.30 வரை திங்கள் தொடக்கம் வியாழன் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை மாலை 5 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெறும்.

வகுப்புக்கள் ஆரம்பம் 02.07.2014
More Than 10 Years Experience
Extended Speaking practice
We are "IELTS" Registration center fr british Council"

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINNING PRGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

(6938)

BRITISH COLLEGE OF ENGLISH
# 192, Navalar Road, Jaffna. Tel: 021 222 0384 / 0778803887

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம்......

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: தரமான ஆசிரியரை தெரிவு செய்து பணம், நேரத்தை விரயமாவதை தவிருங்கள்.
எம்மிடம் கற்ற அதிகமானோர் France, Canada வில் வேலை செய்கிறார்கள்...

ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

YOGIS
Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள். கேக் ஐசிங் பயிற்சிகள்.
புதிய வகுப்புக்கள் 28.06.2014 ஆரம்பமாகவுள்ளன.



சேர விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.



Mrs.Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Diploma in Advanced Modern Make-up Course with Air Brush Make-up (india)
Diploma in Home Economics (Sri Lanka)
T.P :- 0777164923, 021 222 2796
(C-7752)

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரில் எங்குமில்லாத விலைகளில் 1-3 வருட உத்தரவாதத்துடன் கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்

Intel 3.0GHz Processor, Intel Motherboard, 160GB Hard Disk, 2GB DDR-II, Asus DVD Writer, 15" LCD, Keyboard, Mouse, Speaker, 7.2Multy Dongle: Rs: 22450/- (1Year Warranty)

| | |
|---|---|
| Intel D.C Processor | : 8550 |
| Intel I-3 Processor | : 15900 |
| Intel I-7 M. Board | : 7900 |
| Intel G-31 M.Board | : 6200 |
| 500GB Hard Disk | : 6850 |
| 1TB Hard Disk | : 8950 |
| 2TB Hard Disk | : 14250 |
| 2GB DDR-III Ram | : 3450 |
| 4GB DDR-III Ram | : 5650 |
| 8GB DDR-III Ram | : 10250 |

No: 328, Stanly Road, Jaffna. 0774192275 (Near to Ariyakulam Junction)
Branch: 12, Kanagapuram Road, Kilinochchi. 0772533390 (Near to Barathi Hotel)

NORTH LEAD

North Lead இன் 7ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கணனிகளையும் அதன் உதிரிப்பாகங்களையும் 30% விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24x Sam Dvd Writer | : 2675 | 7.2 Mul.Dongle From: | 2450 | 650W Techfine UPS | : 4350 | Lap Hard Disk 500GB | : 7575 |
| ATX Porch Casing | : 2575 | 21.1Mb Multy Dongle : | 3550 | Matrix UPS Battery | : 1550 | Lpa Hard Disk 1TB | : 10875 |
| 1 User Kaspersky | : 1550 | 20MP Webcam From : | 875 | 450W Power Supply | : 1450 | Lap Org Charger From : | 1375 |
| 1 User Bitdefender | : 1450 | Headphone&Mic From: | 250 | Wireless 4port Router | : 4950 | Laptop Battery From : | 6300 |
| 2GB Kings Mic SD | : 475 | Keyboard USB From : | 485 | 19" AOC, HP, LED | : 11850 | Laptop Display From : | 8550 |
| 4GB Kings Mic SD | : 575 | Optical Mouse From : | 250 | 19" V.Sonic, Samsung | : 12500 | Lap Coolar Pad From : | 575 |
| 4GB King Pendrive | : 750 | Powerlogic Key & Mouse : | 1250 | Computer Table Normal : | 2950 | Original Toners, 12A, 35A- | |
| 8GB King Pendrive | : 875 | Wireless Mouse From : | 850 | Samsung 3in1 Printer | : 24500 | 85A, 11A, 15A: From : | 3250 |
| 16 GB Pendrive | : 1475 | Wireless Key& Mouse : | 1950 | 500GB Exter Hard Disk : | 9850 | Dual Core Full Set | : 48700 |
| 32 Gb Pendrive | : 2650 | 2.1 Multymedia Woofer: | 1700 | 1 TB External Hard Disk : | 11950 | Core I-3 Full Set | : 57500 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.